# பேண்தகு சமாதானத்துக்காக இளையோரை ஈடுபடுத்தல்

## பன்மைத்துவ விழுமியங்கள் பற்றிய கற்றல் மற்றும் பயிற்சிக் கையேடு

# பேண்தகு சமாதானத்துக்காக இளையோரை ஈடுபடுத்தல்

## பன்மைத்துவ விழுமியங்கள் பற்றிய கற்றல் மற்றும் பயிற்சிக் கையேடு

**இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF)**

நூலாசிரியர்
M C றஸ்மின்

**ஆலோசனை உதவி**
**பேராசிரியர்** W A D P **வணிகசுந்தர**
*தவிசாளர்*, SDJF

**கலாநிதி** S **ரகுராம்**
*பணிப்பாளர் சபை உறுப்பினர்*, SDJF

**பேராசிரியர் அபய பாலசூரிய**
*நிருவாகப் பணிப்பாளர்*, SDJF

**பங்காளர்கள்**
*தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு*
*மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணம்*
*மாகாணக் கல்வி அமைச்சு, வடமத்திய மாகாணம்*
*மாகாணக் கல்வி அமைச்சு, மத்திய மாகாணம்*
*மாகாணக் கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்*
*மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்*
*மாகாணக் கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்*
*மாகாணக் கல்வித் திணைக்களம், மத்திய மாகாணம்*
*மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழகம்*

**தமிழ் மொழிபெயர்ப்பு:** *எஸ். எம். அதீக்*
**தொகுப்பு உதவி:** *எம். பி. எம். பைரூஸ்*
**வடிவமைப்பு:** *முஹம்மது அஸ்வர்*
ISBN 9-789-557-765-12-9
**பதிப்புரிமை:** © *இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்* (SJDF) - 2018

**அனுசரணை**
*இந்த கையேடு இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயம், கனேடிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும் உள்ளூர் முன்னெடுப்புகளுக்கான கனேடிய நிதியம்* (CFLI) *மற்றும் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை* (NTT) *என்பவற்றின் நிதி உதவி மூலம் உருவாக்கப்பட்டது. எனினும் இந்த கையேட்டின் உள்ளடக்கம் மற்றும் கருத்துகள் என்பவற்றுக்கு இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம்* (SDJF) *பொறுப்பாகும்.*

## இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF)

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF) உயிர்ப்பான ஜனநாயகம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள சமூகங்களின் பேச்சு சுதந்திரம் என்பவற்றின் மேம்பாடு தொடர்பில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஒரு தேசிய மட்ட நிறுவனமாகும். புத்தாக்கமான ஊடகக் கருவிகளின் பயன்பாடு, தவிர்க்கப்பட்டவர்களின் குரல்களை ஓங்கி ஒலிக்க வைத்தல், விளிம்பு நிலை மக்களை வலுப்படுத்தல், தகவல்களுக்கான அணுகலை உருவாக்குதல் மற்றும் வெளிப் படையான கலாச்சாரம் என்பன இந்த நிறுவனத்தின் மூலோபாய முன்னுரிமைகளாகும். இந்த நிறுவனம் தனது இலக்குகளை அடையும் நோக்கில் ஊடக நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஏனைய விளிம்பு நிலைக்கு உட்படுத்தப்பட்ட குழுக்கள் என்பவற்றுடன் இணைந்து பணியாற்றுவதில் கிட்டத்தட்ட 8 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளது.

*இல.623/4 (6A), இராஜகிரிய கார்டன், நாவல வீதி, இராஜகிரிய, இலங்கை.*
*அலுவலகம்: +94117209511-2053513 மின்னஞ்சல்:* info@ldjf.org / *இணையத்தளம்:* www.ldjf.org.

## தாங்குதிறன் வாய்ந்த சமாதானம் ஏற்படுத்துவோர்

சமாதானத்தை கட்டி எழுப்புதல் என்பது கற்றல் மற்றும் வாழ்க்கை அனுபவம் என்பவற்றின் தொடர் செயன்முறை ஆகும். இது இளையோர் பரஸ்பர வேறுபாடுகள் மற்றும் தனித்தன்மைகளை மதித்து பொதுவான தளங்களை அடையாளம் காண அனுமதிக்க வேண்டும். இது முரண்பாடுகளுக்கான புத்தாக்கமான வன்முறையற்ற தீர்வுகளை காண்பதற்கான தாங்குதிறனை இளையோர் இடையே கட்டி எழுப்ப வேண்டும். இது விமர்சன ரீதியான மன நிலையை விருத்தி செய்வதுடன் வன்முறைக்கான வலுவிழந்த தன்மையை நீக்குகின்றது.

கொழும்பில் உள்ள இலங்கை அமெரிக்க தூதுவராலய உதவியுடன் இலங்கை அபிவிருத்திக் கான ஊடகவியலாளர் மன்றம் 2013-2017 காலப் பகுதியில் அமுல்படுத்திய இலங்கை மக்கள் அரங்கு மன்றம் நிகழ்ச்சித் திட்டத்தின் (SLFTP) ஊடாக நாங்கள் இந்த கையேடு உருவாக்கத்துக்கான தேவையை புரிந்து கொண்டோம்.

இந்த மக்கள் அரங்கு மன்றம் நிகழ்ச்சித் திட்டத்-துக்கு (SLFTP) பல வழிகளில் உதவி புரிந்த கௌரவ மனோ கணேசன், தேசிய சகவாழ்வு, கலந்துரை யாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர், இந்த அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. W.M.P.G. விக்ரமசிங்க, இந்நாள் செயலாளர் திரு. M.Y.S. தேசப்பிரிய, கௌரவ கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், கல்வி, விளையாட்டு, இளைஞர் விவகார, மற்றும் கலாச்சார விவகார அமைச்சர், வடக்கு மாகாணம், திரு. S உதயகுமார், பணிப்பாளர் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், பேராசி ரியர் சரத் சந்திரஜீவ, உப வேந்தர், இலங்கை கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழகம், கலாநிதி K. சுதாகர், பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.


இந்த கையேடு முரண்பாடுகளை நடுநிலைத்தன்மை யுடன் அணுகுதல், பல்வகைத்தன்மை மற்றும் தனித்தன்மை என்பவற்றின் பலங்கள், வேறுபா டுகளை மதிப்பதன் முக்கியத்துவம் மற்றும் சகிப்புத்தன்மையுடன் உரையாடலை தொடர்ச் சியாக மேற்கொள்ளல் என்பவற்றில் இளைஞர்க ளுக்கு உதவுவதன் மூலம் அவர்கள் தாங்குதிறன் மிக்க சமாதானம் உருவாக்குவோராக திகழ உதவும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த கையேடு உருவாக்கத்துக்கு இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்துக்கு (SDJF) பரோபகார ரீதியில் உறுதுணை புரிந்த கொழும்பில் உள்ள இலங்கை கனேடிய உயர்ஸ் தானிகராலயத்தின் உள்ளூர் முன்னெடுப்புகளுக் கான நிதியம் (CFLI) மற்றும் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (NTT) ஆகியவற்றுக்கு எனது மன-மார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்த கையேடு உருவாக்கத்தில் பதிப்புரை மற்றும் திட்டமிடல் துணை புரிந்த பேராசிரியர் அபய பாலசூரிய அவர்களுக்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் கையேட்டை இறுதி வடிவத்துக்கு கொண்டுவர துணை புரிந்த திரு ஜோஹ்ன் ரெபர்ட் (உதவி வதிவிடப் பிரதிநிதி) மற்றும் செல்வி காமயா ஜெயதிஸ்ஸ (நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர்) ஆசியா பவுண்டேசன் ஆகியோரின் சேவையை நினைவூட்டுவதில் பெருமை அடைகின்றேன்.


**பேராசிரியர். W A D P வணிகசுந்தர**
தவிசாளர், SDJF



## இந்த கையேடு ஏன் உருவாக்கப்பட்டது?

நான்கு வருடகால இலங்கை அரங்க மன்றம் நிகழ்ச்சித் திட்டத்தை (SLFTP) அமுல்படுத்திய அனுபவத்தின் ஊடாகஇலங்கையின் இளைஞர்களை உயிர்ப்புள்ள சமாதானத்தை கட்டி எழுப்பும் நபர் களாக வலுப்படுத்தும் பல முன்னெடுப்புகள் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் முன்னெடுக்கப் பட்டதை எம்மால் அவதானிக்க முடிந்தது. இதன் விளைவுகளில் ஒன்றாக அதிகமான இளைஞர்கள் ஒட்டுமொத்த சமரச தொடர் செயன்முறையில் தம்மால் பங்களிப்பு வழங்கக் கூடிய இயலுமையின் அளவை கண்டறிந்து உணர்ந்து கொண்டனர். இவர்களில் சிலர் சமாதானத்தை மேம்படுத்த புத்தாக்கமுள்ள ஊடகக் கருவிகள், கலை, கலாச்சாரம், வலையமைப்பு மற்றும் வலுப்படுத்தல் என்பவற்றை பயன்படுத்துவதில் உயிர்ப்புடன் ஈடுபட்டனர்.

எனினும் முனைவாக்கம் கொண்ட அரசியல் கலாச்சாரம் உட்பட ஏனைய காரணிகள் சிலவேளை-களில் அவர்களை முரண்பாடு மற்றும் வன்முறை களை நோக்கி நகர்த்த சாத்தியம் உள்ள காரணி களாகக் காணப்பட்டன. இதன் விளைவுகளில் ஒன்றாக இளைஞர்களின் இடையே தாங்கு திறனை உருவாக்க வேண்டிய உறுதியான தேவை காணப்படுகின்றது. அவர்களுக்கு சமாதானக் கலாச்சாரம் பற்றிக் கற்பிப்பதற்கு மேலதிகமாக அவர்களின் நடுநிலையான மற்றும் ஆக்கபூர்வமான மனநிலைகளை செதுக்கி எடுப்பதும் முக்கியமான-தாகும். இந்த கையேடு இளைஞர்கள் சமாதானக் கலாச்சாரத்தின் பரந்துபட்ட கண்ணோட்டங்களை அலங்கரிக்கும் பன்மைத்துவ விழுமியங்களை விளங்கிக்கொள்ள உதவும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. சமாதானத்தைக் கட்டி எழுப்பும் இளையோரின் புத்தாக்க வெளிப்பாடுகளை செதுக்கி எடுப்பது இந்த தொடர் செயன்முறையின் மேலதிக விளைவாகும்.



## இந்தக் கையேடு எவ்வாறு பயன்படுத்தப்படலாம்?

பரந்துபட்ட வகையில், பன்மைத்துவம் என்பது வேறுபட்ட இயல்புகள் மற்றும் விழுமியங்களைக் கொண்ட ஒரு கருதுகோளாகும். எமது நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை மற்றும் இலங்கையின் பாரிய சூழமைவு என்பவற்றை கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்பட்ட சில பன்மைத்துவ விழுமியங்கள் மாத்திரம் இங்கு கலந்துரையாடப் படவுள்ளன. எனவே இந்த கையேடு பன்மைத்துவ விழுமியங்கள் மற்றும் சில முக்கிய கருதுகோள்களான முரண்பாடு மற்றும் சமாதானம், பல்வகைத்தன்மை, சகிப்புத்-தன்மை, கலந்துரையாடல் மற்றும் மனித உரிமை-கள் என்பவற்றினை தர்க்க ரீதியான ஒழுங்கில் சமர்ப் பிக்கின்றது.

இது கற்றல் கையேடு மற்றும் பயிற்சி ஆவணம் ஆகிய இரு வகைகளிலும் பயன்படுத்தப்படலாம். பயிற்சி தொடர் செயன்முறையை இலகுவாக்கும் வகையில் ஒவ்வொரு கருதுகோளின் முன்னரும் சுருக்கமான விளக்க குறிப்புகள் வழங்கப் பட்டுள்ளன. இந்தக் கையேடு தனி நபர் அனுபவம், பிரதிபலிப்பு மற்றும் இலங்கையின் முரண் பாடுகளுடன் தொடர்புடைய பாரிய விவகாரங்களை சூழமைவாக்கல் போன்றவற்றுக்கான தளங்களை வழங்குகின்றது. இதன் மூலம் பன்மைத்துவ விழுமி யங்கள் தொடர்பான ஆழமான புரிதலை வழங்கு கின்றது.

இந்த கையேட்டில் விபரிக்கப்பட்டுள்ள அமர்வுகள், பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகள் என்பன அனைத்து கற்றல் தேவைகளையும் பூர்த்தி செய்ய போதாமல் போகலாம். எனவே பயிற்றுனர்கள், இலகுபடுத்துனர்கள் மற்றும் ஆசிரியைகளை இந்த கையேட்டை தமது பணிக்கு துணை நல்கும் யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றின் தொகுதியாக நோக்கும் படி நாம் கோருவதுடன் தேவையேற்படின் மேலதிக கற்றல் வளங்களை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# உள்ளடக்கம்


**பிரிவு ஒன்று** **முரண்பாடு என்றால் என்ன? / 02**

முரண்பாட்டை வரையறுத்தல்
முரண்பாட்டுக்கான காரணங்கள்
முரண்பாடுகளின் எடுகோள்கள்
முரண்பாடு - மட்டங்கள் மற்றும் இயக்கவியல்
அமர்வு 1: முரண்பாடு பற்றிய அறிமுகம்
அமர்வு 2: முரண்பாடு பற்றிய கருதுகோள்களை விளங்கிக் கொள்ளல்
அமர்வு 3: முரண்பாட்டு மட்டங்கள் மற்றும் இயக்கவியலை விளங்கிக் கொள்ளல்

**பிரிவு இரண்டு** **முரண்பாட்டை பகுப்பாய்வு செய்தல் / 08**

அமர்வு 4: பங்காளர் பகுப்பாய்வு
அமர்வு 5: முரண்பாட்டு மரம்
அமர்வு 6: சமாதானமிக்க முரண்பாட்டு தீர்வு - அறிமுகம்

**பிரிவு மூன்று** **சமாதானத்தின் அடிப்படைகள் / 16**

சமாதான மட்டம்
நேர்மறை மற்றும் எதிர்மறை சமாதானம்
சமாதானத்துக்கான தகுதிகள்
ஒன்றாக வாழக் கற்றுக்கொள்ளல்
அமர்வு 7: சமாதானத்தை விளங்கிக்கொள்ளல்
அமர்வு 8: சமாதானத்தின் வகையை விளங்கிக் கொள்ளல்
அமர்வு 9: சமாதானத்தின் மட்டம்
அமர்வு 10: சமாதானம் சார்ந்து வாதிடுவோருக்கு தேவையான அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கு/ விழுமியங்கள்

**பிரிவு நான்கு** **பல்வகைத்தன்மை என்றால் என்ன? / 24**

பல்வகைத்தன்மை பற்றிய சுய மதிப்பீடு
அமர்வு 11: நான் ஒரு மரம் - பல்வகைத்தன்மையை உறுதிப்படுத்தல்
அமர்வு 12: முற்கோள்களை சவாலுக்கு உட்படுத்தல்
அமர்வு 13: முற்கோள்களை சவாலுக்கு உட்படுத்தல் - முதல் எண்ணங்கள்

**பிரிவு ஐந்து** **சகிப்புத்தன்மையின் அடிப்படைக் கருதுகோள்கள் / 30**

சகிப்புத்தன்மை பற்றிய உண்மைகள்
அமர்வு 14: சகிப்புத்தன்மையை ''நினைவுடன்'' தொடர்புபடுத்தல்
அமர்வு 15: சகிப்புத்தன்மை நடை

**பிரிவு ஆறு** **உரையாடலின் அடிப்படைக் கருதுகோள்கள் / 34**

உரையாடலுக்கான அடிப்படை விதிகள்
அமர்வு 16: உரையாடல் திறன்கள்

**பிரிவு ஏழு** **மனித உரிமைகளின் அடிப்படைக் கருதுகோள்கள் / 40**

சகிப்புத்தன்மை பற்றிய உண்மைகள்
அமர்வு 17: மனித உரிமைகளுக்கான அறிமுகம்
அமர்வு 18: சிறுவர்கள், இளைஞர்கள், சமாதானம் மற்றும் மனித உரிமைகளுக்கான சர்வதேச உபகரணங்கள் பற்றிய அறிமுகம்
அமர்வு 19: சமாதானம் மற்றும் மனித உரிமைகள்



மூலம்: www.pvhc.net

**#முரண்பாட்டு மாற்றமானது நடைமுறை விடைகளை தேடுவதை விட ஆழமான கேள்விகளை கேட்பதன் மூலமே நிகழ்கின்றது**

பிரிவு ஒன்று

# முரண்பாடு என்றால் என்ன?

## முரண்பாட்டை வரையறுத்தல்

முரண்பாடு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சமூக நிறுவனங்கள் அல்லது தரப்புகள் தமக்கிடையே பரஸ்பரம் ஒவ்வாத இலக்குகள் காணப்படுவதை உணரும் சூழ்நிலை என அறியப்படுகின்றது. இதன் பிரகாரம் முரண்பாடு என்பது விழுமியங்கள், பற்றாக்குறை நிலை கோரல்கள், அதிகாரம் மற்றும் வளங்களுக்கான போட்டி என விளங்கிக் கொள்ளப்பட முடியும். அனேகமாக இது வன்முறை, சனத்தொகை இடப்பெயர்வு, வெறுப்பு மற்றும் யுத்தம் போன்ற எதிர்மறை பதங்களின் தொகுதி மூலம் வரையறுக்கப்படுகின்றது.

எனினும் யதார்த்தத்தில் முரண்பாடுகள் எமது நாளாந்த வாழ்வின் ஒரு பகுதியாக காணப்படுவதுடன் அது அனேகமாக மனித குல பல்வகைத்தன்மை காரணமாகவே ஏற்படுகின்றது. அவை எதிர்மறையாகத்-தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சில வேளைகளில் நேர்மறையான பின் விளைவுகளை கொண்டிருப்பதன் காரணமாக இயற்கையானதாக மற்றும் நடுநிலையானதாக கருதப்படலாம். முரண்பாடுகள் எமது வாழ்வில் நேர்மறையான அல்லது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவது அவற்றை நாம் எவ்வாறு முகாமைத்துவம் செய்கிறோம் என்பதனாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

முரண்பாடு என்பது தவிர்க்க முடியாதது, ஆனால் வன்முறை தவிர்க்க முடியாதது அல்ல. சமாதானத்தை கட்டி எழுப்புவதன் குறிக்கோள் முரண்பாடுகளை கையாள நாம் பயன்படுத்தும் அழிவை ஏற்படுத்தும் வழிமுறைகளை மாற்றி அமைப்பதாகும், இதன் மூலம் நாம் அதிக ஆக்கபூர்வமான பலன்களை பெற முடியும். முரண்பாடுகளை ஆக்கபூர்வமான பலன்களுடன் இணைப்பது பொதுவாக எமது கண்ணோட்டங்களை அதிக நேர்மறை அணுகுமுறையின் பால் மாற்றி அமைக்கும். எனவே கூட்டுறவு அடிப்படையான முரண்பாடு முகாமைத்துவம் சமூக முன்னேற்றம் மற்றும் மாற்றம் என்பவற்றுக்கு வழிவகுக்கும்.

## முரண்பாடுகளுக்கான காரணங்கள்

முரண்பாடு என்பது ஓர் இயற்கையான நிகழ்வாக இருந்த போதும் எமது சமூகத்தினுள் முரண்பாடு மீள ஏற்படுவதில் சில காரணிகள் பங்களிப்பு செய்வதை அடையாளம் காண்பது முக்கியமானதாகும். பின்வரும் சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் ஏற்பட முடியும்.

- ☐ வளங்கள் அநீதியான முறையில் பகிரப்படல்.
- ☐ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களின் இடையே மிகக்குறைந்த தொடர்பாடல் அல்லது தொடர்பாடல் அற்ற நிலை.
- ☐ குழுக்கள் தமக்கிடையே தவறான கருத்து அல்லது முற்கோள்களைக் கொண்டிருத்தல்.
- ☐ பழைய, தீர்க்கப்படாத பதற்றங்கள் காணப்படல்.
- ☐ அதிகாரம் சமமற்ற விதத்தில் பகிரப்பட்டிருப்பதுடன் குறிப்பிட்ட குழுக்கள் விலக்கப்பட்டிருத்தல்.
- ☐ சமூக, சுகாதார, பொருளாதார, அரசியல், உளவியல் மற்றும் கலாச்சாரக் காரணிகள் வன்முறை மற்றும் ஆயுத மோதல் என்பவற்றுக்கு வழிவகுக்கலாம்.

## முரண்பாடுகளின் எடுகோள்கள்

*பின்வரும் பொதுவாக அவதானிக்கப்பட்ட எடுகோள்கள் முரண்பாடுகளுக்கு துணை புரிகின்றன:*

### முரண்பாடுகளுக்கான காரணங்கள்

**எடுகோள் 1**

தனிநபர் மற்றும் சமூகம் ஒன்றின் அடிப்படை மனிதத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான அணுகுதல் வழிகளை இழக்கச் செய்தல் வன்முறை முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

**எடுகோள் 2**

முரண்பாடு என்பது வித்தியாசமான கலாச்சார நோக்குநிலை, விழுமியங்கள் மற்றும் நலன்கள் கொண்ட வேறுபட்ட தனிநபர்கள் அல்லது அத்துடன் குழுக்கள் இடையான தொடர்புகளின் விளைவாக ஏற்படுவதாகும். முரண்பாடு என்பது அனைத்து மனித உறவுகளினதும் இதயமாக கருதப்படலாம்.

**எடுகோள் 3**

அதிகாரம் அனைத்து முரண்பாடுகளினதும் மையமாகும். வேறுபட்ட குழுக்கள் அல்லது தனிநபர்கள் அரச வளங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர போட்டியிடுகின்றன. அவை ஏனையோர் வெளியேற் றப்படும் அல்லது முடக்கப்படும் நிலையிலேயே தாம் அரச அதிகாரத்தை அணுக முடியும் அநேகமான சந்தர்ப்பங்களில் நம்புகின்றன.

**எடுகோள் 4**

முரண்பாடு என்பது போட்டியிடும் சமூக, கலாச்சார, பொருளாதார, மத மற்றும் அரசியல் சட்டக வடிவமைப்புகளால் முறைசார் மற்றும் கட்டமைப்பு ரீதியில் அநீதி மற்றும் சமமின்மை வெளிப்படுத்தப் படுவதால் ஏற்படுத்தப் படுகின்றது. மாற்றத்துக்கான தேவை மற்றும் அந்த மாற்றத்துக்கு எதிரான கட்டமைப்புகள் மற்றும் அமைப்புகளின் எதிர்ப்பு என்பவற்றின் இடையான இழுபறி நிலை முரண்பாட்டை மேலும் அதிகரிக்கின்றது.

## முரண்பாடு - மட்டங்கள் மற்றும் இயக்கவியல்

முரண்பாடு ஒன்றின் மூலம் வன்முறை வெடிப்பது அல்லது சமாதானமாக இருதரப்பும் ஏற்கும் விளைவு ஒன்று எய்தப்படுவது முரண்பாட்டை நாம் கையாளும் வழிமுறையிலேயே தங்கியுள்ளது. எனவே முரண்பாட்டின் இயக்கவியலை விளங்கிக் கொள்வது வினைத்திறன் மிக்க சமாதானத்தை கட்டி எழுப்பும் தீர்வு ஒன்றை உருவாக்க எமக்கு உதவும். முரண்பாடுகளை பொதுவாக பின்வரும் நான்கு மட்டங்களில் வகைப்படுத்த முடியும்.

- ☐ **உள்ளார்ந்த - தனிப்பட்ட முரண்பாடு:** *ஒரு நபரின் உள்ளே ஏற்படும் முரண்பாட்டை குறிக்கின்றது. சமூக முரண்பாடுகளை ஆக்கபூர்வமாக அணுக வழமையாக மக்கள் தமது உள்ளார்ந்த துன்பங்கள் மற்றும் விவகாரங்கள் தொடர்பில் பணி புரிய வேண்டும்.*

- ☐ **நபர்களுக்கிடையிலான முரண்பாடு:** *இது தனி நபர்கள் இடையே அல்லது மக்களின் சிறு குழுக்கள் இடையே உருவாகும் முரண்பாடுகளைக் குறிக்கின்றது. இந்த விடயத்தில் பரந்துபட்ட சமூக மாற்றம் ஒன்றை பேசித்தீர்க்கும் முன்னர் மக்கள் தமக்கிடையே காணப்படும் முரண்பாடுகளை ஈடுபாட்டுடன் தாண்ட வேண்டும்.*

- ☐ **உள்ளார்ந்த - குழு முரண்பாடு:** *மதம், இனம், அரசியல் அல்லது ஏனைய குறிப்பிட்ட அடையாளம் ஒன்றுடன் காணப்படும் குழு ஒன்றினுள் ஏற்படும் முரண்பாட்டை குறிக்கின்றது. நீங்கள் அங்கம் வகிக்கும் குழுவினுள் ஏற்படும் முரண்பாடுகளை அடையாளம் கண்டு முகாமைத்துவம் செய்யக்கூடியவராக நீங்கள் இருக்க வேண்டும், அத்துடன் நீண்ட கால அடிப்படை சமாதான தொடர் செயற்பாட்டுக்கு துணை புரிவதற்காக உங்களது குழுவில் உள்ள ஏனையோருடனும் தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டும்.*

- ☐ **குழுக்களுக்கிடையிலான முரண்பாடு:** *பாரிய ஒழுங்கமைக்கப்பட்ட சமூகக் குழுக்கள் அல்லது அடையாள குழுக்களின் இடையே ஏற்படும் முரண்பாடுகளைக் குறிக்கும். வெற்றிகரமான சமாதானம் கட்டி எழுப்புபவர்களாக தொழிற்பட நாம் எமது சொந்தக் குழு மற்றும் ஏனைய குழுக் களின் இடையே தொழிற்பட தேவையான திறன்களைக் கொண்டிருக்க வேண்டும்.*

## அமர்வு 01: முரண்பாடு பற்றிய அறிமுகம்

செயற்பாட்டு நேரம்: 30 நிமிடங்கள் (குறைந்தது)

நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் முரண்பாட்டின் வேறுபட்ட அம்சங்களை விளங்கிக் கொள்ள மற்றும் வரையறுக்க இயலுமானவர்களாக இருக்க வேண்டும்

பொருட்கள்: பிலிப் அட்டவணைக் காகிதங்கள், மார்க்கர் பேனைகள் மற்றும் புளூ டாக்

**இலகுபடுத்துனருக்கான வழிகாட்டல்கள்**

- ☐ இந்த செயற்பாட்டின் நோக்கத்தை பங்குபற்றுனர்களுக்கு விளக்குங்கள்.
- ☐ பங்குபற்றுனர்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை நான்கு அல்லது ஐந்து குழுக்களாக பிரியுங்கள்.
- ☐ ஒவ்வொரு குழுவும் தமது பிரதிநிதி ஒருவரை அடையாளப்படுத்தும் படி கோருங்கள்.

**பங்குபற்றுனர்களுக்கு பின்வரும் சரி/பிழை கூறும் கூற்றுக்களை வழங்குங்கள்**

- ☐ முரண்பாடு என்பது எப்போதும் எதிர்மறையானது.
- ☐ முரண்பாடு எப்போதும் வன்முறைக்கு வழிகோலும்.
- ☐ முரண்பாடு என்பது தனிநபர் ஒருவரினுள் ஏற்படும் முரண்பாடுகளை குறிக்கின்றது.
- ☐ முரண்பாடு என்பது விழுமியங்கள் மற்றும் கோரல்கள் என்பவற்றுக்காக நடைபெறும் போட்டி.
- ☐ மித மிஞ்சிய அதிகாரப் பாவனை முரண்பாடுகளை நேர்மறையாக உருமாற்ற பொருத்தமான வழிமுறையாகும்.

அனைத்து குழுக்களையும் மேற்தரப்பட்ட கூற்றுகள் பற்றி கலந்துரையாடி அவற்றை ஏற்கின்றனரா அல்லது மறுக்கின்றனரா என தீர்மானிக்கும் படி கூறவும். அனைத்து பிரதிநிதிகளையும் தமது குழுவின் பதில்களை சமர்ப்பிக்கும் படி கோரவும்.

குழுப் பிரதிநிதிகள் அனைவராலும் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணங்களின் பால் குழுக்களின் இடையே கலந்துரையாடல் ஒன்றை இலகுபடுத்தவும். அனைவருடனும் பகிரப்படக் கூடிய பொதுப் பண்புகள் மற்றும் விலகிச்செல்லும் கருத்துகள் கொண்ட விவகாரங்கள் என்பவற்றில் எமது கவனத்தை ஈர்க்கவும். இது முரண்பாடுகளாக மாற்றமடையும் வேறுபட்ட நோக்குகளை உரையாடல் மூலம் தீர்ப்பதற்கான உதாரணமாகவும் அமையும்.

## அமர்வு 2: முரண்பாடு பற்றிய கருதுகோள்களை விளங்கிக் கொள்ளல்

செயற்பாட்டு நேரம்: 60 நிமிடங்கள்

நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் முரண்பாட்டுக்கான காரணங்கள் தொடர்பில் உறுதியான உணர்வைக் கொண்டிருக்க வேண்டும்.

பொருட்கள்: பிலிப் அட்டவணைக் காகிதங்கள், மார்க்கர் பேனைகள் மற்றும் புளூ டாக்

**இலகுபடுத்துனருக்கான வழிகாட்டல்கள்**

- ☐ இந்த செயற்பாட்டின் நோக்கத்தை பங்குபற்றுனர்களுக்கு விளக்குங்கள்.
- ☐ பங்குபற்றுனர்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை நான்கு அல்லது ஐந்து குழுக்களாக பிரியுங்கள்.
- ☐ ஒவ்வொரு குழுவும் தமது பிரதிநிதி ஒருவரை அடையாளப்படுத்தும் படி கோருங்கள்.

**அனைத்து குழுக்களிடமும் பின்வரும் பட்டியலில் இருந்து வாக்கியம் ஒன்றை தெரிவு செய்யும்படி கோருங்கள்:**

- ☐ அநீதியான வளப் பகிர்வின் முரண்பாடுகள் அனேகமாக ஏற்படுகின்றன.
- ☐ பொருத்தமான தொடர்பாடல் இன்மை முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது.
- ☐ ஒருவருக்கொருவர் தவறாகப் புரிந்து கொள்ளல் மற்றும் முற்கோள்கள் என்பன முரண்பாட்டுக்கு வழிகோலுகின்றன.
- ☐ தீர்க்கப்படாத முரண்பாடு அல்லது பதட்டம் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது.

ஒவ்வொரு குழுவையும் தாம் தேர்ந்தெடுத்த வாக்கியத்தை வகிபாகமேற்று நடித்தல், சிறு நாடகம் அல்லது அரங்க நிகழ்வு ஒன்றின் மூலம் விளங்கப் படுத்த கோருங்கள். இலகுபடுத்துனர் இந்த அமர்வை முரண்பாடுகள் பல்வேறு காரணிகளால் ஏற்படுத்தப்படலாம் என விளக்கி முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அவர்/அவள் மாறுபட்ட நோக்கு புள்ளிகள் இடையான வேறுபாடு, ஒத்த தளங்களுக்கான பகுதிகள் மற்றும் இவற்றில் இருந்து கற்றுக் கொள்ளப்பட்ட பாடங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை இலகு படுத்த வேண்டும்.

## அமர்வு 3: முரண்பாட்டு மட்டங்கள் மற்றும் இயக்கவியலை விளங்கிக் கொள்ளல்

**செயற்பாட்டு நேரம்: 60 நிமிடங்கள்**

**நோக்கம்: இந்த அமர்வின் முடிவில் பங்குபற்றுனர்கள் முரண்பாட்டு இயக்கவியல் மற்றும் மட்டங்கள் பற்றி ஆழமான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.**

**பொருட்கள்: பிலிப் அட்டவணைக் காகிதங்கள், மார்க்கர் பேனைகள் மற்றும் புளூ டாக்**

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

*பின்வரும் வழிவகைகள் அடிப்படையில் முரண்பாட்டு மட்டங்கள் மற்றும் இயக்கவியல் தொடர்பில் சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளுதல்.*

### பின்வரும் முரண்பாட்டு மட்டங்களை விளக்குங்கள்

- ☐ *உள்ளார்ந்த - தனிப்பட்ட முரண்பாடு, நபர்களுக்கிடையிலான முரண்பாடு, உள்ளார்ந்த - குழு முரண்பாடு மற்றும் குழுக்களுக்கிடையிலான முரண்பாடு.*
- ☐ *பங்குபற்றுனர்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை நான்கு அல்லது ஐந்து குழுக்களாக பிரியுங்கள்.*
- ☐ *ஒவ்வொரு குழுவும் தமது பிரதிநிதி ஒருவரை அடையாளப்படுத்தும் படி கோருங்கள்.*
- ☐ *தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியை முரண்பாட்டு மட்டங்களை நன்கு விளக்கும் கதை ஒன்றை பகிரும்படி கோருங்கள். குறித்த கதை குழுவில் உள்ள பங்குபற்றுனர்களுடன் தொடர்புடைய தாகவோ அல்லது அவர்களது சமூகத்தில் உள்ள வேறொரு நபருடையதாகவோ இருக்கலாம்.*

### அனைத்து குழுக்களையும் பின்வரும் வினாக்களுக்கு ஒவ்வொரு சமர்ப்பணத்தின் பின்னரும் விடையளிக்க கோருங்கள்

- ☐ *முரண்பாட்டு அனுபவம் தொடர்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள். தொடர்புடைய கதையை பகிருதல் (தேவையான இடத்தில் இரகசியத் தன்மையை பேணவும்)*
- ☐ *எந்த மட்டத்தில் இந்த முரண்பாடு ஏற்பட்டது?*
- ☐ *இந்த முரண்பாட்டுக்கான காரணம் யாது?*

*வினாக்களின் இடையே பங்குபற்றுனர்கள் பிரதிபலிப்புகளை ஏற்படுத்த போதிய கால அவகாசம் வழங்க மறக்க வேண்டாம்.*



Adapted from: www.Freepik.com

**#முரண்பாட்டை பகுப்பாய்வு செய்தல் -**
**சாத்தியமான முரண்பாடு ஒன்றின் காரணங்கள் மற்றும் அதன் சாத்தியமான திசை பற்றிய முறைசார் விசாரணை. இது முரண்பாடுகள் வன்முறை செயல்பாடுகளுக்குள் நுழையாமல் அவற்றை தீர்த்தல் அல்லது முகாமைத்துவம் செய்வதற்கான வாய்ப்புகளை தேடுகின்றது**

## பிரிவு இரண்டு

# முரண்பாட்டை பகுப்பாய்வு செய்தல்

முரண்பாட்டு பகுப்பாய்வு என்பது முரண்பாட்டின் தோற்றுருவம், காரணங்கள், செயற்படுவோர் மற்றும் அதன் இயக்கவியலைப் பற்றிய கற்கை ஆகும்[1]. இதன் நோக்கம் எமது வகிபாகம் மற்றும் நாம் முன்னேறும் சூழமைவு என்பவற்றை சிறப்பாகப் புரிந்து கொள்ள உதவுவதாகும். எனவே முரண்பாட்டு பகுப்பாய்வு எதிர்கால செயற்பாட்டின் நோக்கு நிலைக்கு உதவும்.

முரண்பாடுகள் என்பன இயங்குநிலைத் தொகுதிகளாகும். எந்தவொரு இடையீடும் இந்த தொகுதியின் பகுதியாக அமைவதோடு அது தொகுதியின் புத்தாக்கம் மற்றும் நேர்மறை சக்திகளுக்கு உதவி வழங்குவதில் அல்லது தொகுதியுடன் தொடர்பான கவனக் குவிவைக் கொண்டிருக்க வேண்டும்.

முரண்பாட்டு பகுப்பாய்வு தனிநபர் சார்பாக அல்லது குழு ஒன்றினுள் பங்கு பற்றல் முறையில் மேற் கொள்ளப்படலாம். எனவே இந்த பகுப்பாய்வு முரண்பாட்டின் குறிக்கோளான புரிதலுக்கு வழி வகுப்ப-தில்லை. மாறாக அது ஒருவரின் முரண்பாட்டின் அகநிலை புலனுணர்வுகளை தெளிவாக்கும்.

இந்த வகையில் தனிநபர் அல்லது ஒட்டுமொத்த புலனுணர்வுகள் பிரதிபலிக்கப் படவோ அல்லது தெளிவாக தொடர்பாடலுக்கு உட்படுத்தப்படவோ முடியும்.

முரண்பாட்டு பகுப்பாய்வுக்கான முக்கியமான இரண்டு கருவிகள் அடுத்து வரும் பக்கங்களில் பகிரப்பட்டுள்ளன.

1 Adapted from http://www.guillaumenicaise.com/wp-content/uploads/2014/09/resum%C3%A9-du-cours_analyse-de-conflits.pdf.

## அமர்வு 4: பங்குதாரர்கள் பகுப்பாய்வு

செயற்பாட்டு நேரம்: 60 நிமிடங்கள்

நோக்கம்: பங்குதாரர் பகுப்பாய்வை சாத்தியமான கருவியாக ஆராய்வதற்காக முரண்பாட்டுடன் தொடர்புடைய பெரிய மற்றும் சிறிய பங்குதாரர்களை புரிந்து கொள்ள வேண்டும்.

பொருட்கள்: பிலிப் அட்டவணைக் காகிதங்கள், மார்க்கர் பேனைகள் மற்றும் புளூ டாக்

### இது என்ன?

முரண்பாட்டின் ஒவ்வொரு பிரதான பங்குதாரர்கள் மற்றும் சில சிறிய பங்குதாரர்கள் முரண்பாட்டு தோற்றுருவை உருவாக்க பயன்படுத்தப்படும் சார்பளவிலான எளிய கருவி ஆகும்.

### பங்குதாரர் பகுப்பாய்வில் பின்வரும் மூன்று படிநிலைகள் உள்ளடங்குகின்றன:

a. முதன்மையான மற்றும் துணையான தரப்புகளை பட்டியலிடல்.

b. ஒவ்வொரு தரப்புடனும் தொடர்புடைய பின்வரும் தகவல்களை அடையாளம் காணல்: கூறப்பட்ட (பிரசித்தமான) நிலைகள் அல்லது அத்துடன் கோரிக்கை, ஒவ்வொரு நிலையின் பின்னாலும் காணப்படும் நலன்கள் அல்லது அத்துடன் கோரிக்கை அத்துடன் தொடர்புடைய அடிப்படைத்தேவைகள்.

c. முரண்பாட்டுடன் தொடர்புடைய முக்கிய விடயங்களை அடையாளம் காணல்அதிகார மூலங்கள், ஒவ்வொரு தரப்பினதும் செல்வாக்கு (நேர்மறை அல்லது எதிர்மறை) மற்றும் ஒவ்வொரு தரப்பினதும் பேச்சுவார்த்தைக்கான விருப்பம் போன்றன.

### நோக்கம்:

ஒவ்வொரு தரப்பையும் முரண்பாட்டுடனான அவர்களது தொடர்பையும் புரிந்து கொள்ளல் ஒவ்வொரு தரப்பினதும் தர்க்க ரீதியான மற்றும் அவற்றின் ஊக்கம் என்பவை தொடர்பில் ஆழ்ந்த புரிதலை உருவாக்குதல், தரப்புகள் இடையே காணப்படும் அதிகார இயக்கவியலை அடையாளம் காணல்.

### இதை எப்போது பயன்படுத்த வேண்டும்?

தரப்புகளுடன் நேரடியாக பணியாற்ற முன் ஒரு முன் ஆயத்த முறையில் பயன்படுத்த வேண்டும். தரப்புகளுடன் பணியாற்ற ஆரமபித்தவுடன் திரட்டப்படும் தகவல்களுக்கு ஏற்ப இந்த பகுப்பாய்வு விரிவாக்கம் மற்றும் இற்றையாக்கம் என்பவற்றுக்கு உட்படுத்தப்பட வேண்டும். பேச்சுவார்த்தை தொடர் செயற்பாட்டுக்கு தயாராகும் வேளை: இந்த காரணிகள் எவ்வாறு தரப்புகள் பேச்சுவார்த்தை மேசை மற்றும் அதற்கு வெளியே செயற்படும் என்பதில் செல்வாக்கு செலுத்தும் என்பதால், ஒரு முட்டுக் கட்டையை தகர்க்க உதவும் விதத்தில் தகவல்களை வழங்க உதவும்.

### இதை எவ்வாறு மேற்கொள்வது?

முரண்பாட்டை அடையாளம் காண்க.

முரண்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து தரப்புகளையும் பட்டியல் படுத்தவும்.

அவற்றை முதன்மையான தனிநபர்கள் / குழுக்கள் மற்றும் துணையான தனிநபர்கள் / குழுக்கள் எனவகைப்படுத்தவும்.

முதன்மையான மற்றும் துணையான தரப்புகளை காண்பிக்கும் பட்டியலை தயார் செய்யவும் (தனிநபர்கள் மற்றும் குழுக்கள்)

முதன்மையான தரப்புகள் எனப்படுவன முரண்பாட்டுடன் பிரதான தொடர்புகளை கொண்ட தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஆகும். முதன்மையான தரப்புகள் இன்றி முரண்பாடு அல்லது பிணக்கு தீர்க்கப்பட முடியாததாகும். துணையான தரப்புகள் எனப்படுவன முரண்பாட்டுடன் சில நலன்கள் அல்லது செல்வாக்கு செலுத்தும் முரண்பாட்டுடன் நேரடி ஈடுபாடு அற்ற தரப்புகளாகும். அவை முரண்பாட்டினால் ஆழமான பாதிப்புகளுக்கு முகம் கொடுப்பனவாகவும் இருக்கலாம். முதன்மையான தரப்புகளை பங்குதாரர் பகுப்பாய்வு அட்டவணையின் உச்சியில் வைக்கவும்.

குழுக்களில் உள்ள நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இலகுபடுத்துனர் அட்டவணையை வெண்பலகை, கரும்பலகை, பிலிப் அட்டவணைக் காகிதம் அல்லது சாதாரண காகிதம் ஒன்றில் வரைய வேண்டிய தேவை ஏற்படலாம்.

### இந்த நோக்கத்துக்காக பின்வரும் மாறிகள் பயன்படுத்தப்படலாம்:

- ☐ நிலை
- ☐ நலன்
- ☐ தேவைகள்
- ☐ விவகாரங்கள் / பிரச்சனைகள்
- ☐ அதிகார வழிகள் / செல்வாக்கு
- ☐ பேச்சுவார்த்தைக்கான விருப்பம்

**நிலைப்பாடுகள்**
*தரப்பு அல்லது பங்குதாரரின் பொதுப் பிரகடனங்கள் அல்லது கூறப்பட்ட கோரிக்கைகள்*

*உதாரணமாக, உள்ளூராட்சி தேர்தல்களில் பெண்களுக்கு **25%** இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என பெண்கள் சார்பாக தொழிற்படும் நிறுவனம் ஒன்று கோரலாம்.*

*அதேபோல், பாடசாலை அதிபர் ஒருவர் "பாடசாலை விளையாட்டு மைதானம் பாடசாலையின் சொத்து" எனக்கூறலாம். எனவே அவர் பாடசாலை அதிபரின் முன் அனுமதியின்றி வெளியாட்கள் மைதானத்தை பயன்படுத்த உரிமை இல்லை எனக் கூற முடியும்.*

**நலன்கள் / அக்கறைகள்**
*முரண்பாடு ஒன்றின் வெளியீட்டில் உள்ள அடையாளம் காணக்கூடிய இடர்நிலைகள் (நேர்மறை அல்லது அத்துடன் எதிர்மறை)*

*உதாரணமாக, மேற் குறிப்பிடப்பட்ட பெண்கள் அமைப்பு பெண்கள் முடிவெடுக்கும் தொடர் செயன்முறையில் உயிர்ப்பான வகிபாகத்தை பெறும் நோக்கில் அரசியலில் நுழைவதை உறுதி செய்வதில் ஆர்வம் காட்டலாம். தவறும் பட்சத்தில் அவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் பூர்த்தி செய்யப்படாமல் போகும். அதே போல் பாடசாலை அதிபர் மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் கிடைப்பதை உறுதி செய்யும் தனது நலனின் காரணமாக வெளியாட்களுக்கு மைதான அணுகுதலை வழங்குவதில் விருப்பமின்றி இருக்கக் கூடும்.*

**தேவைகள்**
*வாழ்வதற்கும் வளமடைவதற்கும் அடிப்படை மனிதத் தேவைகள் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் என்பன அவசியமாகும். அடிப்படைத் தேவைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் போது மக்கள் அதற்கு வலுக்கட்டாயமான எதிர் வினைகளை காண்பிக்கின்றனர். இந்த தேவைகளில் பொருள் / பௌதீக அலகுகளும் சமூக மற்றும் கலாச்சார அலகுகளும் உள்ளடங்குகின்றன.*

*உதாரணமாக பெண்கள் நிறுவனம் ஒன்று பெண்கள் மற்றும் ஆண்கள் இருபாலாருக்கும் சம சமூக அந்தஸ்தை உறுதி செய்வதில் கரிசனை உள்ளதாகக் காணப்படும். மேற்குறிப்பிடப் பட்ட பாடசாலை அதிபர் சாத்தியமான வெளி நபர்களால் பாட வேளைகளில் ஏற்படக் கூடிய சத்தம் பற்றி கரிசனை கொண்டவராகக் காணப்படுவார்.*

**விவகாரங்கள்/பிரச்சினைகள்**
*இவைகள் முரண்பாட்டுடன் தொடர்புடைய பிரத்தியேக விவகாரங்கள்.*

**செல்வாக்குக்கான வழிகள் / அதிகாரம்**
*முரண்பாட்டுடன் தொடர்புடைய தரப்புகள் அதிகாரம் மற்றும் செல்வாக்கை வித்தியாசமான மூலங்களில் இருந்து பெறுகின்றன. சில தரப்புகள் பணம், நிலம், முக்கியமான பொருட்கள், வேலைவாய்ப்புகள் மற்றும் நிதி/கடன்களுக்கான அணுகல் போன்ற வளங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. இவை செல்வாக்குள்ள தரப்புகள் எனக் கருதப்படுகின்றன. ஏனைய மூலங்கள் அரசியல் பதவிநிலைகள் மூலம் (தேர்தல், நியமனம் அல்லது பலப்பிரயோகம் மூலம்) பெறப்பட்ட அதிகாரத்தை அனேகமாக பிரதிபலிக்கின்றன. சில அரசியல்வாதிகள் பாரிய மற்றும் உயிர்ப்பான தொகுதிகளை பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது ஆளும் கட்சியில் இருப்பதன் காரணமாக அதிக அதிகாரம் கொண்டவர்களாக கருதப் படுகின்றனர். இதே போல் சக்தி வாய்ந்தவர்களுடன் உள்ள நெருக்கமான தொடர்புகள் காரணமாக சில நபர்கள் செல்வாக்கு மிக்கவர்களாக காணப் படுகின்றனர். இந்த சூழமைவினுள் சில குழுக்கள் / தனிநபர்கள் நேர்மறையான நிகழ்ச்சி நிரலை மேம்படுத்தும் அதேவேளை ஏனையோர் எதிர்மறையான அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடும்.*

**பேச்சுவார்த்தைக்கான விருப்பம்**
*சில தரப்புகள் பிணக்கு ஒன்றை தீர்ப்பதில் அல்லது பாரிய முரண்பாடு ஒன்றை அகற்றுவதில் விருப் பமின்றி இருக்கும். அதேவேளை ஏனையோர் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருப்பர். எனவே அவர் களின் விருப்பு மட்டத்தை அளவிடுதல் முக்கியமானது. எனினும் கரிசனை உள்ள தரப்புகள் ஏன் பேச்சு வார்த்தைக்கு விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி இருக்கின்றன என்பதை ஆராய்வதும் அவசியமானது (உதாரணமாக விருப்பமின்மை தொடர்புடைய செலவுகள், நிதியியல் அல்லது ஏனைய காரணங்களினால் ஏற்பட்டிருக்கலாம்)*

*இந்த பங்குதாரர் பகுப்பாய்வை நீங்கள் மேற்கொள்ளும் போது முரண்பாட்டுடன் தொடர்புடைய முடிவுகளை மேற்கொள்ள மேலதிக தகவல் தேடுதலின் அவசியத்தை நீங்கள் உணரலாம்.*

## அமர்வு 5: முரண்பாட்டு மரம்

செயற்பாட்டு நேரம்: 60 நிமிடங்கள்

**நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர் முரண்பாட்டின் அடிப்படைக் காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி ஆழ்ந்த புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.**

பொருட்கள்: பிலிப் அட்டவணைக் காகிதங்கள், மார்க்கர் பேனைகள் மற்றும் புளூ டாக்

### இது என்ன?

*முரண்பாட்டு மரம் என்பது தரப்பட்ட முரண்பாடு ஒன்றின் காரணங்கள் மற்றும் விளைவுகள் பற்றி பகுப் பாய்வு செய்ய உதவும் ஒரு பயிற்சியாகும். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மையப் பிரச்சனைகளுக்கு பயன்படுத்தப்படலாம். அவற்றுக்கு அடிப்படைக் காரணங்கள் மற்றும் விளைவுகள் அடையாளம் காணப்பட்டு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படும்.*

### நோக்கம்:

*முரண்பாடு ஒன்றுடன் தொடர்புடைய மையப் பிரச்சனைகளை இனங்காண.*

*முரண்பாட்டுடன் தொடர்பை ஏற்படுத்தும் காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை வேறுப டுத்த. குழுக்களின் உள்ளே முரண்பாட்டு தீர்வு தொடர்பில் அவை என்ன செய்ய முடியும் அல்லது செய்ய வேண்டும் மற்றும் முரண்பாடு ஒன்றின் அடிப்படைக் காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் இடையான இணைப்புகளை பிரதிபலிக்கும் வகையில் கலந்துரையாடலுக்கான அடிப்படையை வழங்குதல்.*

### எப்போது இது பயன்படுத்தப்பட வேண்டும்?

*முரண்பாட்டு மரம் முரண்பாட்டு பகுப்பாய்வின் முதலாம் படிநிலையாக விசேடமாக நீங்கள் இடம்பெறும் பிரச்சினை ஒன்றின் ஆரம்பத்தை அடையாளம் கண்ட வேளையில் மேற்கொள்ளப்படலாம்.*

### எவ்வாறு இதைப் பயன்படுத்துவது?

*பங்குபற்றுனர்களை சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளுமாறு கூறி அவர்களின் தெரிவுக்கு ஏற்ப பிரச்சனை ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.*

*அவர்கள் தீர்க்க முனையும் முரண்பாட்டுடன் தொடர்புடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மையப் பிரச்சனைகளில் அவர்கள் கவனக் குவிவைக் கொண்டிருக்க முடியும் என்பதை ஆரம்பத்திலேயே அவர்களுக்கு கூறுங்கள்.*

*வேர்கள், தண்டு மற்றும் கிளைகள் கொண்ட மரமொன்றின் எளிய வரைபடம் ஒன்றை வரையுங்கள்.*

*இந்த வரைபடம் பெரிய காகிதம், பிலிப் அட்டவணை அல்லது ஏனைய வசதியான ஊடகத்தில் வரையப்படலாம்.*

*ஒவ்வொரு குழு அல்லது பங்குபற்றுனருக்கும் அதிகளவான குறிப்பு ஒட்டும்* (Sticky Note) *காகிதங்களை வழங்குங்கள்.*

*அவர்கள் உணரும் வகையில் முரண்பாட்டுடன் தொடர்புடைய முக்கிய காரணிகளை எடுத்துக்காட்டும் ஒன்று அல்லது இரண்டு சொற்களை (குறியீடு அல்லது படங்கள் கூட பயன்படுத்தப்படலாம்) குறிப்பு ஒட்டும் காகிதங்களில் எழுதும்படி கூறுங்கள்.*

### பங்குபற்றுனர்களை அவர்களது குறிப்பு ஒட்டும் காகிதங்களை கீழே கூறப்பட்ட வகையில் ஒட்டும்படி அழையுங்கள்

*அடிப்படைக் காரணங்கள் என அவர்கள் கருதும் விடயங்களை வேர்களில் ஒட்டுதல்*


*மையப் பிரச்சனை எனக் கருதப்படும் விடயங்களை தண்டில் ஒட்டுதல்.*

*கிளைகளில் அவர்கள் கருதும் முரண்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை ஒட்டுதல்.*

*குறிப்பு ஒட்டும் காகிதங்கள் அனைத்தும் ஒட்டப்பட்ட பின்னர் அவை எங்கெங்கே ஒட்டப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்றை இலகு படுத்துங்கள். யாராவது ஒருவர் ஏதாவது காரணம் அல்லது விளைவு ஒன்றின் இடத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சந்தர்ப்பத்தில் ஏன் மற்றும் அது எங்கே பொருத்தப்பட வேண்டும் என்ற கேள்விகளைக் கேளுங்கள். குழு குறிப்பு ஒட்டும் காகிதங்கள் பொருத்தப்பட்ட இடம் தொடர்பில் பொதுவான முடிவை எய்தும் வகையில் கலந்துரையாடலை இலகுபடுத்துங்கள்.*

### கலந்துரையாடலைத் தொடர்ந்து முரண்பாட்டுடன் தொடர்பாக சாத்தியமான இடையீடுகளை ஏற்படுத்தும் புள்ளிகள் பற்றிய அடிப்படையாக இந்த மரம் பயன்படுத்தப்படலாம். அவர்களின் வகிபாகம் மற்றும் இயலுமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு பின்வரும் வினாக்களை கேளுங்கள்

- ☐ *எந்த இடத்தில் உங்களால் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும்?*
- ☐ *உங்களது இடையீடு விளைவுகளை (குணங்குறிகளை) நீக்குவதை அல்லது அடிப்படை காரணங்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டதா?*
- ☐ *மையப் பிரச்சனை(களை) எவ்வாறு உங்களால் சிறப்பாக சென்றடைய முடியும்?*
- ☐ *இதுவரை என்ன விடயங்கள் செய்யப்பட்டுள்ளன அவற்றால் என்ன அடைவுகள் பெறப்பட்டுள்ளன?*
- ☐ *இதைவிட வினைத்திறன் மிக்க வேறொரு அணுகுமுறை காணப்படுகின்றதா?*



உள்ளக இடம் பெயர்ந்தோர்/அகதிகள்
வன்முறை மற்றும் பழிவாங்கல் வட்டங்கள்
பாலியல் வன்முறை
விளைவுகள்
விலக்குதல் மற்றும் மேலாதிக்க கலாச்சாரம்
தண்டித்தல்
பயம் அவநம்பிக்கை முற்கோள்
குழு ஒருமைப்பாடு (எதிர்மறை)
அடிப்படைப் பிரச்சனை
இன முறுகல்
சமமற்ற வளப் பகிர்வு
தம்மவர் நலன் பேணல்
குடியேற்றக் கொள்கை
வரலாற்றை மாற்றியமைத்தல்
ஊழல்
ஏற்படுத்தும் காரணங்கள்
ஆணாதிக்க கலாச்சாரம்
பொருளாதார ஓரங்கட்டல் மற்றும் சமத்துவமின்மை
அரசியல் அதிகாரத்தில் இருந்து தவிர்க்கப்படல்


முரண்பாட்டு மரம்

**அமர்வு 6: சமாதானமிக்க முரண்பாட்டு தீர்வு - அறிமுகம்**
**செயற்பாட்டு நேரம்: 30 நிமிடங்கள்**
**நோக்கம்: இந்த அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் முரண்பாடுகள் மற்றும் முரண்பாடுகளை உருமாற்றுவதற்கான அமைதியான மூலோபாயங்கள் என்பவற்றை அடையாளம் காண இயலுமானவர்களாக இருக்க வேண்டும்**
**பொருட்கள்: அச்சிடப்பட்ட முரண்பாட்டு சூழ்நிலைக் காட்சிகள்**

**இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்:**

- ☐ கீழே தரப்பட்டுள்ள முரண்பாட்டு சூழ்நிலைக் காட்சிகளை அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் வாசித்துக் காட்டுங்கள்.
- ☐ சில குழுக்கள் அவற்றினை ஏற்க விரும்பினால் அதற்கு அனுமதியுங்கள்
- ☐ பங்குபற்றுனர்களின் விருப்புக்கு ஏற்ப இருக்கை ஒழுங்குகளை அமைக்க அனுமதியுங்கள்
- ☐ பங்குபற்றுனர்களுக்கு முரண்பாடு ஒன்றை அமைதியாக தீர்க்க வாய்ப்பு உண்டு என்பதை அறிவியுங்கள். தீர்வுகளை தேடும்போது வன்முறைக்கு அனுமதியில்லை என்பதை தெரிவியுங்கள்.
- ☐ பங்குபற்றுனர்கள் வகிபாக நடிப்பில் தேக்கநிலை ஏற்படும் போது புதிய தன்னார்வ பங்குபற்றுனர்கள் செயற்பாட்டில் பங்கேற்க முடியும். பிரேரிக்கப்பட்ட மாற்றம் பங்குபற்றுனர்களுக்கு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் அதை ஏற்காமல் இருக்க முடியும்.

**சூழ்நிலைக் காட்சியின் அடைவுகளை குழுக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தல். இதை மேற்கொள்ள பின்வரும் வினாக்களை தொடுக்கவும்.**

- ☐ இந்த பிரச்சனையை தீர்க்க எது உங்களுக்கு உதவியது?
- ☐ எந்த அணுகுமுறை பலனளிக்கவில்லை?
- ☐ இந்த முரண்பாட்டை எதாவது ஒன்று அதிகமாக்கியதா? ஏன் என விளக்கவும்.
- ☐ எவ்வாறான ஏனைய அணுகுமுறைகள்/தீர்வுகள் பரீட்சிக்கப் பட்டிருக்கலாம்?
- ☐ வந்திருப்பவர்களில் எவராவது இவ்வாறான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனரா? அவ்வாறான சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்தீர்கள்?

அனைத்து அமைதியான தீர்வு தேடும் பரிந்துரைகளையும் உறுதி செய்யுங்கள்.

**சாத்தியமான வகிபாக நடிப்பு சூழ்நிலைக் காட்சிகள்:**



நீங்கள் உள்ளூராட்சி அதிகார சபை ஒன்றிடம் இருந்து சான்றிதழ் ஒன்றைப் பெற முயலும் இளைஞர். எனினும் அதற்குப் பொறுப்பான அதிகாரி அவருக்கு உங்களது மொழியைப் பேசவோ விளங்கவோ முடியாத காரணத்தினால் உங்களது கோரிக்கையை சரியாக கவனிக்கவில்லை. அத்துடன் அவர் நீங்கள் பேசும் முறையையும் விரும்பவில்லை. நீங்கள் என்ன செய்வீர்கள்?

---



நீங்கள் ஒரு விவசாயி. உங்களுக்கு சொந்தமான ஐந்து ஹெக்டேயர் நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள விரும்புகிறீர்கள். உங்களது அனைத்து நிலப்பகுதிகளும் கிராமத்தின் குளத்தை அண்டிய பிரதேசங்களிலேயே அமைந்துள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்றுக்கு அமைய கிராமிய விவசாய அதிகாரி சமகால வறட்சி காரணமாக கிராமக் குளத்தின் தண்ணீர் மட்டம் குறைவாகக் காணப்படுவதால் உங்களுக்கு ஒரு ஹெக்டேர் நிலத்தில் மாத்திரம் பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் எனக் கூறுகிறார். அவரது கட்டளையை நீங்கள் நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அரசாங்கத்தின் உர மானியத்தை உங்களுக்கு ரத்துச் செய்வதாக எச்சரிக்கின்றார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

---



உங்களது தாயாரின் மறைவுக்குப் பின்னர் தந்தையை நீங்கள் பராமரித்து வருகின்றீர்கள் அத்துடன் உங்கள் சேமிப்பு முழுவதையும் அவருக்கு மருந்துகள் வாங்க செலவழித்து விட்டீர்கள். உங்களது வருடக் கணக்கான சேவைக்காக உங்களது தந்தை தனது வீட்டை உங்களுக்கு பரிசளிக்க முடிவு செய்கிறார். எனினும் உங்களது மூத்த சகோதரர் தானே அந்த வீட்டுக்கு சட்ட ரீதியான உரிமையாளர் எனக் கோருகிறார். கிராம வழக்கத்தின் படி மூத்த மகனே சொத்தை பெறுவதற்கு உரித்துடையவர். நீங்கள் என்ன செய்வீர்கள்?

---



நீங்கள் பணியில் உங்களது கலாச்சார உடையை அணிய விரும்பும் ஒரு பெண் வைத்தியர். அண்மையில் அரச வைத்தியசாலை ஒன்றில் உங்களுக்கு வைத்தியர் நியமனம் வழங்கப்பட்டது. அந்த வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரி உங்களது உடை வழக்கத்தை மாற்ற வேண்டும் என கண்டிப்பாகக் கூறுகிறார். எனினும் கலாச்சார அடையாளம் உங்களது உரிமை என நீங்கள் கருதுவதால் நீங்கள் அதை இழக்க விரும்பவில்லை. நீங்கள் என்ன செய்வீர்கள்?

# ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 2250 (2015)

## இளைஞர், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பானது

“சமகால உலக சனத்தொகையில் தற்போதைய இளைஞர்களின் எண்ணிக்கை உலகம் அறிந்த வகையில் மிகவும் கூடியதாகும். அத்துடன் ஆயுத முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இளைஞர்களே பெரும்பான்மையாக காணப் படுகின்றனர்.”

“இளைஞர்கள் நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்தை உருவாக்குவதில் உயிர்ப்புடன் ஈடுபட வேண்டும் அத்துடன் நீதி மற்றும் சமரசம் ஆகியவற்றில் பங்களிக்க வேண்டும்.”




“இளைஞர்களின் கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளை தகர்த்தல் சமரசம் மற்றும் நிலைத்து நிற்கும் சமாதானம் என்பதில் வியத்தகு பாதிப்புகளை ஏற்படுத்தும்.”

“பாரிய இளைஞர் சனத்தொகை தனித்தன்மை வாய்ந்த சனத்தொகை சார் நன்மையாகும். இந்த நன்மை உள்ளடக்கும் கொள்கைகள் காணப்படும் இடத்து நிலைத்து நிற்கும் சமாதானம் மற்றும் பொருளாதார விருத்தி என்பவற்றில் பங்களிக்கும்.”



### 01. பங்கேற்பு / பங்குபற்றல்

- அனைத்து உறுப்பு நாடுகளும் முரண்பாட்டை தடுத்தல் மற்றும் தீர்த்துவைத்தல் தொடர்பான அனைத்து மட்ட தீர்மானம் மேற் கொள்வதில் இளைஞர்க ளின் உள்ளடங்கிய பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான வழிகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
- சமாதான உடன்படிக்கைகளை பேச்சுவார்த்தை செய்தல் மற்றும் அமுல்படுத்தும் வேளைகளில் தொடர்புடைய அனைத்து செயற்பாட்டாளர்களும் கருத்தில் கொள்ளப்படுவதுடன் பொருத்தமான வகையில் இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் கருத்துகள் உள்வாங்கப்பட வேண்டும்.



### 02. பாதுகாப்பு

- ஆயுத முரண்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து தரப்புகளும் இளைஞர்கள் உட்பட பொது மக்களை அனைத்து வகை பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படை வன்முறைகளில் இருந்து பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- அனைத்து நாடுகளும் தமது எல்லைகளுக்குள் இளைஞர்கள் உட்பட அனைத்து தனிநபர்களினதும் மனித உரிமைகளை மதித்து உறுதி செய்ய வேண்டும்.



### 03. தடுப்பு

- இளையோர்கள் அங்கீகரிக்கப்பட்டு வன்முறைத் தடுப்பு செயற்பாடுகள் மற்றும் சமூக ஒற்றுமைக்கான உதவிகளை மேற் கொள்ளவும் போதிய உதவிகளை வழங்கி உள்வாங்கப் படுவதற்கான சாதகமான சூழலுக்கான வசதி செய்ய உறுப்பு நாடுகள் வலியுறுத்தப் படுகின்றன.
- இளையோர் பங்களிப்புடனான ஒரு சமாதானக் கலாச்சாரம், சகிப்புத்தன்மை கலாச்சாரங்கள் மற்றும் சமயங்களுக்கு இடையிலான கலந்துரையாடலை ஊக்குவிப்பதற்கு அனைத்து தொடர்பான தரப்பும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



### 04. பங்குடமை

- இளையோர்களின் தேவைகள் மற்றும் பங்கேற்பைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான வகையில் தமது அரசியல், நிதியியல், தொழில்நுட்ப மற்றும் ஏற்பாட்டியல் உதவிகளை அதிகரிக்குமாறு உறுப்பு நாடுகள் வலியுறுத்தப்படுகின்றன.
- கடும்போக்குவாதத்தை வியாபிக்கச் செய்யும் சாத்தியமிக்க சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான மூலோபாயங்களை விருத்தி செய்வதில் உரிய உள்ளூர் சமூகங்கள் மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களின் பங்கேற்பை உறுதி செய்ய உறுப்பு நாடுகள் ஊக்குவிக்கப் படுகின்றன.



### 05. பங்கேற்காமையும் மீள்ஒருங்கிணைவும்

- ஆயுதக்களைவு, படையணிக்களைவு மற்றும் மீள் ஒருங்கிணைவுக்கான நடவடிக்கைகள் ஆயுத முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட இளையோரின் தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டும். சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதும் பால்நிலை உணர் தன்மையுடனான இளையோர் தொழில் வாய்ப்புகள் மற்றும் உள்வாங்கிய தொழிலாளர் கொள்கை.
- அனைத்து தொடர்புடைய செயற்பாட்டாளர்களும் இளையோரின் இயலளவு மற்றும் திறன்கள் என்பன சமாதானக் கலாச்சாரத்தினை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட கல்வி வாய்ப்புகளின் ஊடாக கட்டி எழுப்பப் படுவதில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்..



மூலம் : www.undp.org

**#சமாதானம் -**
**இருட்டால் இருட்டை அகற்ற முடியாது,**
**வெளிச்சத்தினாலேயே அதை**
**மேற்கொள்ள முடியும்.**

**வெறுப்பால் வெறுப்பை அகற்ற முடியாது.**
**அன்பினாலேயே அகற்ற முடியும்.**

**- மார்டின் லூதர் கிங்.**

பிரிவு மூன்று

# சமாதானத்தின் அடிப்படைகள்

சமாதானம் என்பது ஒரு நழுவலான பதமாகும். இது அனேகமாக மகிழ்ச்சி, இணக்கம், நட்பு, இசைவு, அசஞ்சலம், ஓய்வு, மோனம், போர் நிறுத்தம், சாந்தி மற்றும் நடுநிலைத்தன்மை போன்றவற்றுடன் தொடர்புடையது. மன அமைதி அல்லது சாந்தம் என்பன அவ்வாறான புரிதலைப் பிரதிபலிக்கின்றன. எனினும் இதன் மிகவும் பிரபல்யமான நோக்கு அமைதி என்பது வேற்றுமை, வன்முறை அல்லது யுத்தம் அற்ற நிலை என்பதாகும். அவ்வாறான சூழமைவில் சமாதானம் என்பது சட்ட நிலை அல்லது சிவில் அரசாங்கம், நீதியான நிலை அல்லது மிகுநலம், அதிகாரச் சமநிலை என வரையறுக்கப்படலாம். இருந்தும் சமாதானம் என்பது இசைவு மற்றும் ஒய்வு நிலை எனவும் விளங்கிக்கொள்ளப்பட முடியும். இந்த ஒவ்வொரு விளக்கமும் வித்தியாசமான மட்டங்களில் செயற்படுகின்றன. எனவே மனிதத் தன்மையில் சமாதானம் ஆகக் கூடிய விழுமியத்தைக் கொண்டுள்ளது[1].

மக்கள் தமது முரண்பாடுகளை வன்முறையின்றி தீர்க்க இயலுமான சந்தர்ப்பம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த ஒன்றாக உழைக்கும் சந்தர்ப்பங்களில் அமைதி எட்டப்படுகின்றது. இதன் பிரகாரம் சமாதானம் பின்வரும் சந்தர்ப்பங்களில் எட்டப்படும்

வன்முறை பற்றிய அச்சுறுத்தல் அல்லது பயம் அற்ற நிலையில் அனைவரும் பாதுகாப்புடன் வாழுதல் மற்றும் வன்முறையின் எந்த வடிவமும் நடைமுறையில் உள்ள சட்டத்தினால் சகித்துக் கொள்ளப்படாத நிலை.

சட்டத்தின் முன் அனைவரும் சமம். நீதிக்கான முறைமை நம்பிக்கைக்கு உரியது மற்றும் மக்களின் உரிமை-களைப் பாதுகாப்பதற்கு நியாயமான மற்றும் வினைத்திறன் மிக்க சட்டங்கள் காணப்படல்.

அரசியல் முடிவுகளை செம்மைப்படுத்த அனைவரும் பங்குபற்றக் கூடிய நிலை அத்துடன் அரசாங்கம் மக்களுக்கு பொறுப்புக் கூறக் கூடியது.

அனைவரும் தமது நல்வாழ்வுக்கான உணவு, சுத்தமான தண்ணீர், வீடு, கல்வி, சுகாதாரச் சேவைகள் மற்றும் பண்பான வாழும் சூழல் போன்ற அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய நியாயமான மற்றும் சமமான அணுகுதல் காணப்படல்.

பால்நிலை, இனம் அல்லது ஏனைய அடையாள நிலை வேறுபாடின்றி அனைவருக்கும் வாழ்வதற்கு தேவை யான வேலைவாய்ப்பு காணப்படல்.


1 Rummel, R.J. (1975-1981) Understanding Conflict and War, The Just Peace, Vol. 5, Chapter 2, Sage Publication

### சமாதானத்தின் மட்டம்

*கௌதம புத்தர் கூறியது போல் "சமாதானம் உன்னில் இருந்தே வருகின்றது, அதை வெளியில் தேடாதே". எனவே நாம் சமாதானத்தில் உள்ளக அல்லது தனிப்பட்ட சமாதானம் தொடக்கம் பல மட்டங்களில் தொடர்புகள் காணப்படுவதை விளங்கிக் கொள்ள வேண்டும்.*

*சமாதானம் பற்றிய எமது புரிதல்களில் தனிப்பட்ட சமாதானத்தில் தொடங்கி பரந்த வட்டங்கள் வரை பல மட்டங்களில் தொடர்புகள் உள்ளடக்கப்படுவதை விளங்கிக் கொள்ள வேண்டும்.*

**சமாதானத்தின் மட்டங்கள்**




**மூலம்**: Loreta Navarro-Castro, Jasmin Nario - Galace (2008) Peace Education, Center for Peace Education

### நேர்மறை சமாதானம் மற்றும் எதிர்மறை சமாதானம்

*நேர்மறை சமாதானம் மற்றும் எதிர்மறை சமாதானம் இடையான வேறுபாடு அநேகமான சந்தர்ப்பங்களில் காணப்படுகின்றது. அனைத்து வடிவங்களிலும் வன்முறை அற்ற நிலையை எதிர்மறை அமைதி குறிக்கும் அதேவேளை நேர்மறை அமைதிக்கு ஏற்படுத்தப்படும் அனைத்து கட்டமைப்பு மற்றும் முறைசார் தடைகளின் வீரியத்தை குறைத்தல் அவசியமாகின்றது. இதன் மூலம் உண்மையான பேண்தகு தன்மையுடைய அமைதியை உருவாக்கலாம். நீதிக்கான தேவை, சமத்துவம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வேளையில் நேர்மறை அமைதி யுத்தம் மற்றும் பௌதீக வன்முறை முடிவு என்பவற்றுக்கு அப்பால் உள்ள விடயங்களில் கரிசனை கொள்கின்றது.*


*நேர்மறை மற்றும் எதிர்மறை சமாதானம் என்பவற்றினை கருதுகோளாக்கத்துக்கு உட்படுத்துவதற்கான ஒரு வழி கண்ணாடி நீர்க் குவளை ஒன்றை கருத்தில் கொள்வதாகும். சமகால சமூகத்தில் இந்த நீர்க்குவளை வன்முறை மற்றும் யுத்தத்தால் நிரம்பியுள்ளது. இந்த வன்முறை வடிவங்களை அகற்றுதல் கண்ணாடிக் குவளையை காலியாக்குகின்றது, அத்துடன் எதிர்மறை அளவான வன்முறையை உருவாக்குகின்றது. எனவே எதிர்மறை சமாதானம் ஏதாவது ஒன்றை எடுக்கும் போது ஏற்படுகின்றது. இப்போது அந்தக் குவளை நீதி, சமத்துவம் மற்றும் ஏனைய விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகளால் மீள் நிரப்பப் படும் போது அவை வன்முறைக் கட்டமைப்புடன் எதிர்வினையாற்றி நேர்மறை சமாதானத்துக்கான நிலை எட்டப்படுகின்றது. வேறொரு வகையில் கூறுவதாயின் நாம் அந்தக் குவளையை உண்மையான சமாதானத்தால் மீள்நிரப்பி உள்ளோம்.*

*அதே போன்று சமாதானத்துக்கு உலகளாவிய நீதி அவசியமாகின்றது. சமகாலத்தில் உலகளாவிய சமூகங்கள் மற்றும் பொருளாதார முறைமைகள் என்பவற்றில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் உலக சமாதானத்தை எட்டுவதற்கு தேவையான முன் நிபந்தனைகளாக நோக்கப்படுகின்றன. எனவே சமாதானக் கல்வியுடன் கரிசனையான பிரதான துறைகளாக பின்வருவன காணப்படுகின்றன.*

(a) *பொருளாதார மற்றும் அபிவிருத்தி இழப்புகள்*
(b) *சூழல் மற்றும் வளங்கள்*
(c) *உலகளாவிய மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி*

*சமத்துவமின்மை மற்றும் அநீதிப் பிரச்சனைகளை ஆராய்வதன் மூலம் அத்துடன் அவற்றை தொடர்ச்சியாக்கும் கட்டமைப்புகள் தொடர்பான அநீதி கற்கை சமாதானக் கல்வியின் மத்தியாகக் காணப்படுகின்றது. கற்பவர்கள் இந்த கட்டமைப்புகளில் அவர்கள் இருக்கும் இடத்தை விளங்கிக் கொள்ள ஆரம்பிப்பர். அது அவர்களின் விழுமியங்கள் மற்றும் நடத்தைகள் தொடர்பான சுய தேடலை ஆரம்பிக்க வழிவகுக்கும்.*

*நேர்மறை அமைதி மற்றும் எதிர்மறை அமைதி (மூலம்: ஹிக்ஸ், 1988)*




**மூலம்**: Loreta Navarro-Castro, Jasmin Nario - Galace (2008) Peace Education, Center for Peace Education

### அமைதிக்கான தகுதியுடைமைகள்

*பின்வருவன அமைதியை அடைவதற்கு தேவையான முக்கிய அறிவுப் பகுதிகள், திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள் ஆகும். இந்த தகுதியுடைமைகள் எமது குடியியல் கல்வி மற்றும் அமைதி முறைமை என்பவற்றின் பகுதிகளாக இருக்க வேண்டும். இந்த தகுதியுடைமைகளை கற்பிக்கும் போது இலகுபடுத்துனர்கள் அதிக பிரதிபலிப்புக்கான தளம், குறைகாண் மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல், அனைத்து இளையோர்களும் ஒரு ஒட்டு மொத்த அடையாளத்தை பற்றி சிந்திக்க அனுமதிக்கும் நோக்கில் அனுபவப் பகிர்வு வழங்குவதோடு ஒருவருக்கொருவர் தமது தனிப்பட்ட அடையாளத்தை மதிக்க வேண்டும்.*

**இந்த வரைபடத்தை தொடர்ந்து திட்டத்தில் உள்ள ஒவ்வொரு விடயம் பற்றியும் ஒரு சிறு விளக்கம் வழங்கப்படும்**

**மனப்பாங்குகள்/விழுமியங்கள்**

01. சுய மரியாதை
02. ஏனையோரை மதித்தல்
03. பால்நிலைச் சமநிலை
04. உயிர்களை மதித்தல்/அறவழி
05. பரிவு
06. உலகளாவிய கரிசனை
07. சூழல் பற்றிய கரிசனை
08. ஒத்துழைப்பு
09. வெளிப்படை மற்றும் சகிப்பு
10. நீதி
11. சமூக பொறுப்பு
12. நேரான நோக்கு

**அறிவு**

01. முழுமையான அமைதிக் கருதுகோள்
02. முரண்பாடு மற்றும் வன்முறைக்கான காரணங்கள்
03. சில அமைதிவாய்ந்த மாற்றீடுகள்:
    - ஆயுதக்களைவு
    - அறவழி
    - வன்முறைத் தடுப்பு
    - தீர்வு
    - உருமாற்றம்
    - மனித உரிமைகள்
    - மனித ஒற்றுமை
    - மக்களாட்சி மயமாக்கம்
    - நீதி அடிப்படை அபிவிருத்தி
    - பேண்தகு அபிவிருத்தி

**திறன்கள்**

01. பிரதிபலிப்பு
02. விமர்சன ரீதியான சிந்தனை மற்றும் பகுப்பாய்வு
03. தீர்மானம் எடுத்தல்
04. கற்பனைத்திறன்
05. தொடர்பாடல்
06. முரண்பாட்டுத்தீர்வு
07. ஒத்துணர்வு
08. ஒத்துழைப்பு

**மூலம்**: Loreta Navarro-Castro, Jasmin Nario - Galace (2008) Peace Education, Center for Peace Education

---

**அமைதி**



அன்பு, பரிவு, ஒத்திசைவு, சகிப்பு, கவனம் மற்றும் பகிர்தல், சுதந்திரம், பச்சாதாபம், ஆன்மீகம், நன்றி

**மனித உரிமைகள்**



மனித உரிமைகளுக்கான மதிப்பு, நீதி, ஒருமைப்பாடு, பொறுப்புக் கூறுதல், நேர்மை, ஏற்றுக் கொள்ளுதல், பல்வகைத் தன்மையை பாராட்டுதல்,சுதந்திரம் மற்றும் ஒத்துழைப்பு

**ஜனநாயகம்**



சட்டம் ஒழுங்கை மதித்தல், சுதந்திரம் மற்றும் பொறுப்பு, சமத்துவம், சுய ஒழுக்கம், பொறுப்புடன் கூடிய குடியுரிமை, விமர்சனச் சிந்தனை, ஒற்றுமை

**நிலைபேண்தகு அபிவிருத்தி**



வினைத்திறன், தொழில்துறை, எதிர்கால திசைநோக்கு, சூழல் கரிசனைகள், வளங்களின் சொத்துரிமை, புத்தாக்கம், சிக்கனம், எளிமை, சுய சூழலியல்

## ஒன்றாக வாழக் கற்றுக் கொள்ளல்


ஒத்திசைவு மற்றும் சமாதானத்துடன் எவ்வாறு ஒன்றாக வாழ்வது என்பதைக் கற்றுக் கொள்ளல் வாழ்நாள் முழுவதும் கடப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும் ஒரு தொடர் செயன்முறை ஆகும். பரஸ்பர மரியாதை, புரிந்து கொள்ளுதல், அன்பு மற்றும் பகிர்தல், பரிவு, சமூகப் பொறுப்பாண்மை, ஒருமைப்பாடு, குழுக்கள் (இன, சமூக, கலாச்சார, தேசிய மற்றும் உலகளாவிய) மற்றும் தனிநபர்கள் இடையான பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளல் மற்றும் சகித்துக் கொள்ளுதல் போன்ற அடிப்படை விழுமியங்களை ஒப்புக்கொண்டு நடைமுறைப்படுத்தும் நிலையிலேயே இந்த கற்றல் தொடர் செயன்முறை சாத்தியமாகும். இந்த விழுமியங்கள் அகவயப் படுத்தப்பட்டு ஒன்றாக நடைமுறைப் படுத்தப்படும் போதுதான் நீதியான, சுதந்திரமான, அமைதியான மற்றும் ஜனநாயக சமுதாயமொன்றுக்கான தேடலை பாதிக்கக் கூடிய பிரச்சனைகளை தடுக்க, அகற்ற அல்லது தீர்க்க முடியும்.

இந்த தொடர் செயன்முறை உள் சமாதானத்தை உருவாக்குவதுடன் ஆரம்பமாகின்றது. உண்மை, அறிவு என்பவற்றை தேடுதல் மற்றும் ஏனைய மக்களின் கலாச்சாரங்களை விளங்கிக் கொள்ளும் மக்கள் பகிரப் படும் விழுமியங்கள் எதிர்கால நலன்களுக்கு அவசியமானவை என்பதை அநேகமான சந்தர்ப்பங்களில் சிறப்பாக புரிந்து கொள்கின்றனர். அமைதி மற்றும் ஒத்திசைவுடன் இணைந்து வாழக் கற்றுக் கொள்வ-தற்கு சமாதானம், மனித உரிமைகள், ஜனநாயகம், சமூக நீதி மாறும் பேண்தகு அபிவிருத்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட, அனைத்து மட்டங்களிலும் உள்ள தொடர்புகளின் தரங்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.

1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சர்வதேசக் கல்வி மற்றும் விழுமியங்கள் கல்விக்கான ஆசிய பசுபிக் வலையமைப்பு (APNIEVE) என்பது சமாதானத்துக்கான கல்வி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றில் பிராந்திய துறைசார் நிபுணர்களின் வலையமைப்பாகும். இந்த வலையமைப்பை ஏற்படுத்துவ-தற்கான யோசனை UNESCO நிறுவனத்தின் பல பிராந்திய ஒன்றுகூடல்களில் பெறப்பட்ட பரிந்துரைகள் மற்றும் யோசனைகள் மூலம் பெறப்பட்டது.

கீழ் வருவது APINIEVE வலையமைப்பினால் உருவாக்கப்பட்ட மிகவும் பயன்மிக்க விழுமிய முறைமை ஆகும்.

**சமாதானம் - ஜனநாயகம் - பேண்தகு அபிவிருத்தி - மனித உரிமைகள்**



## அமர்வு 7: சமாதானத்தை விளங்கிக் கொள்ளல்

செயற்பாட்டு நேரம்: 60 நிமிடங்கள்

நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் சமாதானம் பற்றிய கருதுகோளை முழுமையாக விளங்கிக் கொள்வர்.

பொருட்கள்: பேனைகள், மார்க்கர் பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக், மெழுகு வண்ணக்கோல்கள் மற்றும் வரைதல் காகிதங்கள்

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டல்கள்

- ☐ *அனைத்து பங்குபற்றுனர்களையும் கண்களை மூடுமாறு கூறுங்கள். அவர்கள் சமாதானத்தை உணர்ந்த தருணம் ஒன்றை நினைவு கூருமாறு கூறுங்கள் (அவர்களது நினைவுகளை மீட்ட போதிய அவகாசம் வழங்குங்கள்)*
- ☐ *அதன் பின்னர் அவர்களின் சமாதானத்துடன் இணைந்த நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி சிந்தனை செய்யுமாறு கோருங்கள்.*
- ☐ *அவர்களை பலகையில் ஒரு வலை வரைபை வரையுமாறு கூறி அவர்களின் யோசனைகளை வலை வரைபில் குறிக்கச் சொல்லுங்கள்.*
- ☐ *அவர்கள் பகிர்ந்த யோசனைகள், நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகள் இரண்டு பாரிய குழுக்களாக பிரிக்கப்படலாம் என்பதை சுட்டிக்காட்டுங்கள்.*
- ☐ *அமைதி என்பது மிகுந்த சூழமைவுசார் விடயம் என்பதால் சமாதானம் பற்றிய புரிதல் நபருக்கு நபர் வேறுபடும் என்பதை விளக்குங்கள்.*
- ☐ *இறுதியாக பங்குபற்றுனர்கள் சமாதானத்தை உணர்வதற்கு என்ன நிலைமைகள் அவர்களை இயலுமாக்கின என்பதை பகிரவும் விளக்கவும் கோருங்கள்.*

## அமர்வு 8: சமாதானத்தின் வகையை விளங்கிக் கொள்ளல்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 45 நிமிடங்கள்

நோக்கம்:: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் நேர்மறை மற்றும் எதிர்மறை சமாதானம் இடையான வேறுபாட்டை புரிந்து கொள்ள இயலுமானவர்களாக இருப்பர்.

பொருட்கள்: பேனைகள், மார்க்கர் பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக், மெழுகு வண்ணக்கோல்கள் மற்றும் வரைதல் காகிதங்கள்

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ *வெண்பலகையில் சமாதானத்தின் மையப் பாகுபடுத்தலை எழுதுங்கள் - எதிர்மறை சமாதானம் மற்றும் நேர்மறை சமாதானம்.*
- ☐ *அவை இரண்டுக்கும் இடையான வேறுபாட்டை நினைவூட்டி விளக்குங்கள்.*
- ☐ *அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் எழுதும் காகிதம் ஒன்றை வழங்கி எதிர்மறை சமாதானம் மற்றும் நேர்மறை சமாதானம் ஆகிய இரண்டுக்கும் உதாரணங்களை எழுதும்படி கூறுங்கள் (இந்த பயிற்சியை மேற்கொள்ள குறைந்தது 15 நிமிடங்கள் அவகாசம் வழங்குங்கள்).*
- ☐ *இயலுமாயின் ஒவ்வொரு பங்குபற்றுனருடனும் சிறிது நேரம் செலவழித்து அவர்கள் சரியான சிந்தித்தல் தொடர் செயன்முறையில் உள்ளனரா இல்லையா என்பதை அவர்களுக்கு தெரிவியுங்கள்.*
- ☐ *நேர்மறை மற்றும் எதிர்மறை என்பனவை உண்மையாக எவற்றைக் குறிக்கின்றன என விளக்கி அமர்வை பூர்த்தி செய்யுங்கள்.*

## அமர்வு 9: சமாதானத்தின் மட்டங்கள்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 30 நிமிடங்கள

நோக்கம்:: இந்த அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் சமாதானத்தின் மட்டங்கள் பற்றி தெளிவாக விளங்கிக் கொள்வர்...

பொருட்கள்: பேனைகள், மார்க்கர் பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக், மெழுகு வண்ணக்கோல்கள் மற்றும் வரைதல் காகிதங்கள்

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டல்கள்

- ☐ இந்த செயற்பாட்டின் நோக்கம் சமாதானத்தின் பல மட்டங்களைப் பற்றி கற்றுக் கொள்வதாகும் என பங்குபற்றுனர்களுக்கு விளக்குங்கள்.
- ☐ தனிப்பட்ட சமாதானம், தனிநபர் இடையான சமாதானம், சமூக சமாதானம், உலகளா விய சமாதானம் மற்றும் புவி மற்றும் மனித குலம் இடையான சமாதானம் போன்ற சமாதான மட்டங்களை அவர்களுக்கு சுருக்கமாக விளங்கப்படுத்துங்கள்.
- ☐ பங்குபற்றுனர்களை ஐந்து குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் பிலிப் அட்டவணைக் காகிதம் ஒன்றை வழங்குங்கள்.
- ☐ ஒவ்வொரு குழுவுக்கும் வேறுபட்ட சமாதான மட்டம் ஒன்றை ஒதுக்குங்கள்.
- ☐ ஒதுக்கப்பட்ட சமாதான மட்டத்தை அடைய தேவையான நிலைகளை உதாரணங்கள் மூலம் விளக்குமாறு அவர்களைக் கோருங்கள்.

அனைத்து குழுக்களையும் தமது நோக்குகளை சமர்ப்பணம் செய்யுமாறு கூறுங்கள். அனைத்து வேறுபட்ட மட்டங்களிலும் சமாதானம் எய்தப்பட வேண்டும் என விளக்கி அமர்வை நிறைவு செய்யுங்கள்.

## அமர்வு 10: சமாதானம் சார்ந்து வாதிடுவோருக்கு தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகள்/விழுமியங்கள்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 45 நிமிடங்கள்

நோக்கம்:: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் சமாதானம் சார்ந்து வாதிடுவோருக்கு தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகள்/விழுமியங்கள் பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டிருப்பர்

பொருட்கள்: பேனைகள், மார்க்கர் பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக், மெழுகு வண்ணக்கோல்கள் மற்றும் வரைதல் காகிதங்கள்

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ பங்குபற்றுனர்கள் தம்மை சமாதானம் சார்ந்து வாதிடுவோர் எனக் கருதுகின்றனரா எனக் கேளுங்கள்.
- ☐ அவர்களது விடைகளை விளக்கும்படி கோருங்கள்
- ☐ பங்குபற்றுனர்களை ஐந்து குழுக்களாக பிரியுங்கள்.

அனைத்து குழுக்களையும் தமது இலட்சிய சமாதானம் சார்ந்து வாதிடும் நபரை வரையும்படி கூறுங்கள்.
அனைத்து குழுக்களிடமும் இலட்சிய சமாதானம் சார்ந்து வாதிடுபவர் கொண்டிருக்க வேண்டிய அறிவு, மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளை தீர்மானிக்கும்படி கூறுங்கள்.
சமாதானம் சார்ந்து வாதிடுவோரை அடையாளப்படுத்தும் விடயங்களைக் கூறி அமர்வை நிறைவு செய்யுங்கள் (அறிவு, மனப்பாங்குகள், விழுமியங்கள்)



மூலம்: www.eaton.com

**#பல்வகைத்தன்மை -**
**நான் உன்னை விட வித்தியாசமானவன்**
**அல்ல, ஆனால் நான் உன்னைப்போல்**
**வித்தியாசமானவன்**

பிரிவு நான்கு

# பல்வகைத்தன்மை என்றால் என்ன?

"நாம் மற்றவர்களுடன் அதிக
தொடர்பாடலை மேற்கொள்ளும்
போது, பரஸ்பர விழுமியங்களை
அதிக அளவில் விளங்கிக்கொள்ளும்
போது நமது பரஸ்பர மரியாதை
அதிகரிக்கும்"

- தலாய் லாமா

பல்வகைத்தன்மை என்பதன் மூலம் வேறுபட்ட மனிதர்கள் வேறுபட்ட விடயங்களை கருத்தில் கொள்கின்றனர். முரண்பாட்டு சூழ்நிலை ஒன்றில் பல்வகைத்தன்மை என்பது ஒரு விடயத்தை குறிக்கும் அதே வேளை வேலைத்தள சூழலில் அது முற்றிலும் மாறுபட்ட விடயத்தை கருத்தில் கொள்கின்றது. எனினும் பல்வகைத்தன்மை என்பது ஒவ்வொரு தனிநபரும் கொண்டுள்ள வித்தியாசங்கள் மற்றும் பிரத்தியேக அடையாளங்களை உள்ளடக்குதல் என பொதுவாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. எனவே பல்வகைத்-தன்மை என்பது மக்களுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளை அடையாளம் காணுதல், ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் மதித்தலாகும்.

இதன்படி, பலவகைத்தன்மையில் வயது, இனம், பால்நிலை, பௌதீக இயலுமை, பாலியல் நோக்கு, மதம், சமூகப் பொருளாதார வகுப்பு, கல்வித்தகைமை, பிறந்த பிராந்தியம், மொழி உட்பட ஏனைய விடயங்கள் உள்ளடங்குகின்றன. எனினும் இது வாழ்க்கை அனுபவம், குடும்பத்தில் உள்ள நிலைகள், ஆளுமை, வேலையின் செயற்பாடுகள், பணிப்படிநிலை வரிசையில் உள்ள இடம் போன்ற தனிநபர் ஒருவரின் பார்வைகளை உருவாக்கும் ஒத்த இயல்புகளில் காணப்படும் வேறுபாடுகளையும் குறிக்கின்றது.

நிறுவனங்களில் பணி அல்லது உறவு ஒன்றைப் பாதிக்கும் ஒவ்வொரு தனிநபர் வேறுபாடுகளையும் பல்வகைத்தன்மை உள்ளடக்குகின்றது. பல்வகைத்தன்மை என்பது நிறுவன பணியாளர்களால் உருவாக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள், தனிப்பட்ட, நபர்களுக்கு இடையான மற்றும் நிறுவண நடவடிக்கைகள் என்பவற்றில் தாக்கம் செலுத்துகின்றது.

குறுகிய மனப்பான்மைகளை உருவாக்கும் பிரதிகூலங்களை தடுப்பதற்கு பரந்துபட்ட நோக்கு ஒன்றை உருவாக்குவது பல்வகைத்தன்மைக்கு அவசியமானது. பல்வகைத்தன்மை உங்களுடன் தொடர்புடையது, உங்களது தேவைகளை நீங்கள் மதிக்கும் விதம், உங்களது தனித்தன்மை மற்றும் சமூகத்தினுள் உங்களது வகிபாகம். மனிதனாக ஒருவரின் அடையாளத்தை ஏனையோர் அறிந்திருக்க வேண்டும். அத்துடன் நாம் ஒருவரை ஒருவர் தொடர்பு படுத்தும் ஒட்டுமொத்த கலாச்சாரத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். அதே போல் எமக்குள் வித்தியாசங்கள் காணப்படுவதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே ஏனையோரை அவர்களது அடையாளம் மற்றும் கலாச்சாரத்தின் ஊடாக நோக்குவதன் மூலம் சமமான முறையில் கருத்தில் கொள்ள வேண்டும்.

## பல்வகைத்தன்மையின் உதாரணங்கள்

*பால்நிலை*
*வயது*
*நிறம்*
*இனம்*
*குலம்*
*கலாச்சாரம் / கலாச்சார அடையாளம்*
*மதம்*
*சமூகப் பொருளாதார நிலை / வருமானம்*
*இயலுமைகள் (பௌதீக / உள)*
*கற்றல் முறைகள்*
*புவியியல் பிரதேசம்*
*பாலியல் நோக்கு*
*பெற்றோர் நிலை*
*திருமண நிலை*
*கல்வி*
*திறமை / திறன்கள்*
*விழுமியங்கள்*
*அனுபவங்கள்*
*வாழ்க்கை முறை*
*குடும்பம் (தனிக் குடும்பம், தத்துக் குழந்தை, விரிநிலைக் குடும்பம், ஏனையவை)*
*பௌதீக இயல்புகள் (உயரம், குட்டை, பருத்த, மெல்லிய, தசைநார் பற்றிய).*

## பல்வகைத்தன்மை பற்றிய சுய மதிப்பீடு

*பங்குபற்றுனர்களை அவர்களது சொந்த பல்வகைத்தன்மை பற்றி சுய மதிப்பீடு மேற்கொள்ள அழையுங்கள். ஒவ்வொரு பங்குபற்றுனரையும் நான்கு வட்டங்களை வரைந்து அவர்கள் எவ்வாறு ஒவ்வொரு வட்டத்துக்குள்ளும் தங்களைப் பொருத்திக் கொள்வார்கள் எனக் கேளுங்கள். தம்மை பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக (பெரிய வட்டங்கள்) அல்லது குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகக் (சிறிய வட்டங்கள்) கருதுவதற்கு ஏற்ப வட்டங்கள் மாறுபடும். எனவே ஒவ்வொரு பகுதிக்கும் தமது துறைசார் மற்றும் தனிப்பட்ட வாழ்வின் எந்த சந்தர்ப்பத்தில் உறுதியாக பல்வகைத்தன்மையை கருத்தில் கொண்டனர் என அவர்கள் அவர்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். உதாரணமாக சில நபர்கள் அதிகார கட்டமைப்புகள் பற்றி பரந்த பார்வையைக் கொண்டிருப்பர் எனினும் ஏனையோருடன் தொடர்பாடுவதற்கான தேவையை உணர மாட்டார்கள். சிலர் தீவிர செயற்பாட்டாளர்கள், எந்த மாற்றத்துக்கும் தயாராக இருப்பர். எனினும் சில வேளைகளில் அவர்கள் தமது சுய அடையாளம் மற்றும் சமூகத்தினுள் அவர்களது வகிபாகம் பற்றி மறந்திருப்பர். சிலர் காணப்படும் அதிகார கட்டமைப்புகளைக் கருத்தில் கொள்ளாது தனிப்பட்ட வேறுபாடுகளை மாத்திரம் காண்பர். இறுதியாக அனைத்து பிரிவுகளின் தலைப்புகளையும் வாசித்து பங்குபற்றுனர்கள் பரந்த நோக்கை கொண்ட தலைப்பை தெரிவு செய்யுமாறு கூறுங்கள். வேறுபட்ட நோக்குகளை கொண்ட பங்குபற்றுனர்களை இணைத்து அவர்களின் பகுப்பாய்வுகளை பரிமாற்றம் செய்யும் படி கூறுங்கள். இது அவர்கள் பரந்துபட்ட முறையில் அணுகாத பல்வகைத்தன்மையின் விடயங்களின் கண்ணோட்டங்களை விரிவாக்க பயிற்சியின் போது உதவும்.*

## அமர்வு 11: நான் ஒரு மரம் - பல்வகைத்தன்மையை உறுதிப்படுத்தல்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 45 நிமிடங்கள்

நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் ஒவ்வொரு தனி நபரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள் மற்றும் பல்வகைப்பட்டவர்கள் என உணர்ந்து கொள்வர்...

பொருட்கள்: பிலிப் அட்டவணைக் காகிதங்கள், பேனைகள் மற்றும் புளூ டாக்.

ஒருவரின் வாழ்வில் வேரிட்டுள்ள நம்பிக்கைகள் மற்றும் செல்வாக்குகளை வேர்கள் குறிக்கின்றன.
தண்டு வாழ்க்கை கட்டமைப்பை குறிப்பாக உறுதியான மற்றும் பொருத்தப்பட்டுள்ள விடயங்களைக் குறிக்கின்றது.
கிளைகள் உறவுகள் மற்றும் தொடர்புகள், பணிப்புகள், நலன்கள் மற்றும் ஒருவர் எவ்வாறு நேரத்தை செலவழிக்கின்றார் எனக் குறிக்கின்றன.
தகவல் மற்றும் அறிவு மூலங்களை இலைகள் குறிக்கின்றன.
அரும்புகள் ஒருவரின் யோசனைகள் எதிர்கால எதிர்பார்ப்புகள் மற்றும் அவரது சொந்த இயலுமையை குறிக்கின்றன.
பூக்கள் எந்த விடயம் ஒருவரை விசேடமானவர் ஆக்குகின்றது மற்றும் அவரது பலன்களைக் குறிக்கின்றது.
சவால்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கஷ்டங்களை முட்கள் குறிக்கின்றன.

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ மேற்தரப்பட்ட பட்டியலின் படி மரமொன்றின் வேறு வேறான பகுதிகள் குறிக்கும் மூலங்களை பங்குபற்றுனர்களுக்கு விளக்குங்கள்.
- ☐ ஒவ்வொரு பங்குபற்றுனருக்கும் பிலிப் அட்டவணைக் காகிதம் மற்றும் பேனை என்பவற்றை வழங்குங்கள்.
- ☐ மேற்தரப்பட்ட விளக்கத்தின் பிரகாரம் அவர்களது சொந்த மரத்தை வரையும்படி கூறுங்கள்.
- ☐ சுவரொன்றில் பிலிப் அட்டவணைக் காகிதங்களை காட்சிப் படுத்துங்கள்.
- ☐ பங்குபற்றுனர்களுக்கு அனைத்து மரங்களிலும் பிரதிபலிப்பை தனித்தனியாக ஏற்படுத்த போதிய அவகாசம் வழங்குங்கள்.

### இறுதியாக பங்குபற்றுனர்களை பின்வரும் விடயங்களை கலந்துரையாடும்படி கூறுங்கள்.

- ☐ நீங்கள் எதை அவதானித்தீர்கள்?
- ☐ இந்த பயிற்சியின் மூலம் நீங்கள் எதைக் கற்றுக் கொண்டீர்கள்?

அவர்களது மரங்கள் ஒருவருக்கொருவர் ஒப்பானதாக அல்லது வித்தியாசமானதாக இருப்பதற்கான காரணத்தை விளக்குங்கள். இதை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பங்குபற்றுனரையும் பின்வரும் வாக்கியங்களை நிறைவு செய்யும்படி கூறுங்கள்.

- ☐ நான் ஒரு வித்தியாசமான மனிதன், ஏனெனில் நான்.......................................................................
- ☐ நான் வித்தியாசம் அற்றவன், ஏனெனில்.......................................................................................

மக்கள் பல்வேறுபட்ட வழிகளில் பல்வகைப்பட்டவர்கள். அத்துடன் பல்வகைத்தன்மை ஒரு ஆசீர்வாதம் மற்றும் பலம் என்பவற்றை விளக்கி அமர்வை நிறைவு செய்யுங்கள்.

அமர்வு 12: முற்கோள்களை சவாலுக்கு உட்படுத்தல்
செயற்பாட்டு நேரம்: குறைந்தது 45 நிமிடங்கள்
நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் தமது முற்கோள்கள் மற்றும் படிகங்கள் என்பவற்றை கண்டறிவதுடன் அவற்றை சவாலுக்கு உட்படுத்துவர்
பொருட்கள்: பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக், மெழுகு வண்ணக்கோல்கள் மற்றும் வரைதல் காகிதங்கள்

**இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்**

- ☐ *படிகம் என்பது மிகவும் எளிமைப் படுத்தப்பட்ட குறிப்பிட்ட குழு ஒன்றைப் பற்றிய பொதுமையாக்கல் ஆகும். வழமையாக இது எதிர்மறையானது மற்றும் சாதகமற்றதுமாகும். அத்துடன் இதற்கு போதுமான அடிப்படை காணப்படுவதில்லை.*
- ☐ *முற்கோள் என்பது குறிப்பிட்ட குழு அல்லது தனிநபர் மீது அவன்/அவள் குழுவின் மீது சுமத் தப்பட்டுள்ள எதிர்மறை தரங்களை கொண்டவர் என நாம் முன்னரே ஊகித்துக் கொண்ட எதிர்மறையான அல்லது விரோதமான எண்ணமாகும்.*

*பங்குபற்றுனர்களை சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.*
*மேற்தரப்பட்ட வேறுபாட்டை அனைவருக்கும் விளக்கவும்.*
*அனைத்து குழுக்களையும் தமது உறுப்பினர்கள் கொண்டுள்ள பிரத்தியேக வேறுபாடுகள் தொடர்பில் சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளுமாறு கூறவும்.*
*இந்த வேறுபாடுகளின் விளைவாக அவர்களுக்கு சிறுவயதில் வழங்கப்பட்ட எதிர்மறையான செய்திகளை மீட்டுமாறு கோரவும்.*
*பங்குபற்றுனர்களை ஒரு முழுமையான அமர்வுக்கு அழைக்கவும்.*
*அவ்வாறான எதிர்மறை செய்திகளை பகிருமாறு கோரவும்.*
*அவற்றில் படிக மற்றும் முற்கோள் செய்திகளை குறிப்பெடுக்கவும்.*
*படிகம் மற்றும் முற்கோள்களை வேறுபிரித்து அந்த செய்திகளை அவர்களுக்கு விளக்கவும்.*

**பின்வரும் விடயங்களைக் கலந்துரையாட பங்குபற்றுனர்களை அழைக்கவும்**

- ☐ *நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?*
- ☐ *நீங்கள் எவ்வாறு நடத்தப்பட விரும்பியிருப்பீர்கள்?*
- ☐ *இந்த எதிர்மறையான செய்திகளை உருவாக்கும் காரணங்கள் அல்லது காரணிகள் எவை என நீங்கள் நினைக்கிறீர்கள்?*

*பங்குபற்றுனர்களை தமது குறிப்புப் புத்தகத்தில் இந்த பாகுபாடுகள் மற்றும் முற்கோள்களை சவாலுக்கு உட்படுத்தும் ஆகக் குறைந்தது ஒரு நடவடிக்கையை எழுதும்படி கூறுங்கள்.*

**அமர்வை நிறைவு செய்யும் முன்னர் பங்குபற்றுனர்களை பின்வரும் விடயங்களில் பிரதிபலிப்பை மேற்கொள்ளும்படி கூறுங்கள்**

- ☐ *அவன்/அவள் தொழுதான். அது என்னுடைய மதம் அல்ல.*
- ☐ *அவன்/அவள் சாப்பிட்டான். அது நான் சாப்பிட்டது அல்ல.*
- ☐ *அவன்/அவள் பேசினான். அது நான் பேசும் மொழி அல்ல.*
- ☐ *அவன்/அவள் உடுத்திருந்தான். அது நான் உடுத்தது அல்ல.*
- ☐ *அவன்/அவள் எனது கையைப் பிடித்தான். அதன் நிறம் என்னுடைய நிறத்தைப் போன்றது அல்ல.*
- ☐ *எனினும் அவன் சிரித்த போது அது நான் சிரித்ததை போன்றே இருந்தது. அத்துடன் அவன் அழுத போது அது நான் அழுதது போன்றே இருந்தது.*
- ☐ *நான் உனக்கு வித்தியாசமானவன் அல்ல, ஆனால் நான் உன்னைப்போல் வித்தியாசமானவன்.*

## அமர்வு 13: முற்கோள்களை சவாலுக்கு உட்படுத்தல் - முதல் எண்ணங்கள்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 45 நிமிடங்கள்

நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் தமது முற்கோள்கள் மற்றும் படிகங்கள் என்பவற்றை கண்டறிவதுடன் அவற்றை சவாலுக்கு உட்படுத்துவர்

பொருட்கள்: பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக்,


### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

*பின்வரும் அனைத்து சொற்களையும் நோக்குங்கள். இதன் போது உங்கள் மனதில் தோன்றும் முதல் இரண்டு அல்லது மூன்று அடைமொழிகளையும் எழுதுங்கள் (இது உங்களது எண்ணங்கள் அல்லது பாரம்பரிய எண்ணங்களை பிரதிபலிக்கலாம்). அது நேர்மறையாக இருப்பினும் எதிர்மறையாக இருப்பி-னும் உங்களது மனதில் தோன்றும் முதல் எண்ணங்களை எழுதுங்கள்.*

- ☐ *வலது குறைந்தோர்*
- ☐ *தெற்கான் (தெற்குப் பகுதி மக்கள்)*
- ☐ *தமிழ்*
- ☐ *முஸ்லிம்*
- ☐ *சிங்களம்*
- ☐ *ஆசிரியர்கள்*
- ☐ *வயது முதிர்ந்தோர்*
- ☐ *பெண்கள்*
- ☐ *கிறிஸ்தவர்*
- ☐ *வெள்ளை*
- ☐ *ஓரினச் சேர்க்கையாளர்கள்*
- ☐ *ஆண்கள்*
- ☐ *சிவந்த கண்கள்*
- ☐ *காயமடைந்த முகம்*
- ☐ *மெதுவான பேச்சு*
- ☐ *வறிய நபரின் மகன்/மகள்*
- ☐ *ஒரு மாணவன்*

### தனிப்பட்ட பிரதிபலிப்பு

*மேலுள்ளவற்றை தொடர்ந்து உங்கள் வாழ்வில் நீங்கள் நீங்களாக இருப்பதன் காரணமாக பாகுபாட்டுக்க்கு உட்படுத்தப்பட்ட அல்லது அநீதியான முறையில் நடத்தப்பட்ட நேரம் ஒன்றைப் பற்றி சிந்தியுங்கள். சூழ்நிலையை விபரியுங்கள். நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்? எவ்வாறு அதை சமாளித்தீர்கள்? என்ன கற்றுக் கொண்டீர்கள்?*



Adapted from: www.blog.alphaeducation.edu

**#சகிப்புத்தன்மை -**
**பரிவு மற்றும் சகிப்புத்தன்மை என்பன பலவீனத்தின் அடையாளங்கள் அல்ல மாறாக பலத்தின் அடையாளங்கள்**

## பிரிவு ஐந்து

# சகிப்புத்தன்மையின் அடிப்படைக் கருதுகோள்கள்

*பின்வருவன பாரிஸ் நகரத்தில் 16 நவம்பர் 1995 அன்று இடம்பெற்ற UNESCO அமைப்பின் பொதுச் சபையின் 28 வது அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகிப்புத்தன்மைக் கொள்கைகள் பிரகடனத்தில் பெறப்பட்டவை ஆகும்.*

*சகிப்புத்தன்மை என்பது மரியாதை, எமது உலகக் கலாச்சாரங்களின் செறிவான பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளல், மனிதனாக இருப்பதற்கு எமது வெளிப்பாடுகளின் வடிவங்கள் என்பவற்றுக்கு ஒத்த கருத்துள்ளதாக நோக்கப்படுகின்றது. இது அறிவு, வெளிப்படைத்தன்மை, சிந்தனைச் சுதந்திரம் மற்றும் அவற்றின் தொடர்பாடல், மனச்சாட்சி மற்றும் நம் பிக்கைகள் என்பவற்றால் ஆதரித்துப் பேணப்படு கின்றது. சகிப்புத்தன்மை என்பது வேறுபாடுகளில் ஒத்திசைவதாகும். இது ஒரு தார்மீகப் பணி மாத்திரமன்றி அரசியல் மற்றும் சட்டத்தின் தேவையாகும். சகிப்புத்தன்மை என்பது அமைதியை சாத்தியமாக்கும் நற்பண்பாகும். அது யுத்தக் கலாச்சாரத்தை அமைதிக் கலாச்சாரத்தால் மாற்றீடு செய்ய பங்களிக் கின்றது.*

*சகிப்புத்தன்மை என்பது விட்டுக்கொடுப்போ, அருள்பாலிக்கும் பண்போ அல்லது சலுகை வழங்குவதோ அல்ல. அதற்கு மேலாக சகிப்புத் தன்மை என்பது உலகளாவிய மனித உரிமைகள் மற்றும் ஏனையோரின் அடிப்படை சுதந்திரம் என்பவற்றை ஏற்றுக் கொள்வதால் ஏற்படுத்தப்படும் உயிர்ப்பான மனப்பாங்கு ஆகும். எந்த சந்தர்ப்பத் திலும் இது இந்த அடிப்படை விழுமியங்களை மீறுவதற்கான நியாயமாக அது பயன்படுத்தப்பட முடியாது. சகிப்புத்தன்மை என்பது தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நாடுகளினால் கடைப்பிடிக் கப்பட வேண்டும்.*

*சகிப்புத்தன்மை என்பது மனித உரிமைகள், பன்மைத் துவம் (கலாச்சார பன்மைத்துவம் உட்பட), ஜனநா யகம் மற்றும் சட்ட ஆட்சி என்பவற்றை கடைப்பி டிப்பதற்கான பொறுப்பாண்மை ஆகும். வறட்டு பிடிவாதம், முழுமைத்துவம் என்பவற்றை நிராகரிப் பதை அது உள்ளடக்குவதோடு சர்வதேச மனித உரிமைப் பொறிமுறைகளினால் உருவாக்கப்பட்ட நியமங்களை உறுதி செய்கின்றது.*

*மனித உரிமைகளுக்கான மரியாதையுடன் இணைந்த சகிப்புத்தன்மையை கடைப்பிடித்தல் சமூக அநீதி யை சகித்துக் கொள்ளல் அல்லது ஒருவரின் குற்றத் தை கைவிடுதல் அல்லது நலிவாக்குதல் எனப் பொ ருள் கொண்டது அல்ல. இதன் பொருள் ஒருவர் தனது சொந்த தீர்ப்பை பின்பற்றி ஒழுக சுதந்திரமானவர் என்பதுடன் ஏனையோர் தமது தீர்ப்பை பின்பற்றி ஒழுக சுதந்திரமானவர்கள் என ஏற்றுக் கொள்வதாகும். இதன் கருத்து மனிதர்கள் தமது தோற்றம், சூழ்நிலை, பேச்சு, நடத்தை மற்றும் விழுமியங்கள் என்பவற்றில் இயற்கையாகவே பல்வகைத்தன்மை கொண்டவர்கள் எந்த யதார்த் தத்தை ஏற்றுக் கொள்வதுடன் அவர்களுக்கு அமைதியாக வாழ அவர்கள் அவர்களாகவே இருக்க உரிமை கொண்டவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்வதாகும். அத்துடன் அது ஒருவரின் நோக்கை இன்னொருவரில் திணிக்க முடியாது என்ற பொருளையும் தருகின்றது.*

*நாடாளாவிய மட்ட சகிப்புத்தன்மைக்கு நீதி மற்றும் பக்கச்சார்பற்ற சட்டவாக்கம், சட்ட அமுலாக்கம், நீதி மற்றும் நிருவாக தொடர் செயமுரைகள் என்பன அவசியமாகின்றன. அத்துடன் பொருளாதார மற் றும் சமூக வாய்ப்புகள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடும் இன்றி கிடைக்க வேண்டும் என்பதும் இங்கு அவசியமாகின்றது. விலக்குதல் மற்றும் ஓரங்கட்டப்படல் என்பன ஏமாற்றம், எதிர்ப்பு மற்றும் வெறிக் கொள்கை என்பவற்றுக்கு வழிவகுக்கும்.*

*அதிக சகிப்புத்தன்மை கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டுமானால் நாடுகள் காணப்படும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களை ஏற்றுக் கொள்ளல், சமூகத்தில் அனைத்து தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு சம கவனிப்பு மற்றும் வாய்ப்புகளை வழங்குவதற்கு தேவையான புதிய சட்டவாக் கங்களை உருவாக்க வேண்டும்.*

### சகிப்புத்தன்மை பற்றிய உண்மைகள்

- ☐ *சகிப்புத்தன்மை என்பது நீங்கள் கோரும் அனைத்து உரிமைகளையும் ஏனையோருக்கும் வழங்குவதாகும்*
- ☐ *சகிப்புத்தன்மை என்பது உங்களிலும் பார்க்க வித்தியாசமானவர்களை ஏற்றுக் கொள்ளல், அறிவித்தல், பாராட்டுதல் மற்றும் அனுபவித்தல் ஆகும்.*
- ☐ *சகிப்புத்தன்மை என்பது மற்றவர்கள் நீங்கள் சிந்திக்கும் வழியில் சிந்திக்கவோ அல்லது நீங்கள் சிந்திக்கும் வகையில் செயற்படவோ மாட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்வதாகும். சகிப்புத்தன்மையை காண்பிக்க சிறந்த வழி அனுமானங்கள் எடுப்பதை தவிர்ப்பதாகும்.*
- ☐ *அனைத்து மக்களும் நியாயம், மரியாதை மற்றும் கௌரவத்துடன் நடத்தப்பட உரித்துடையவர்கள். பழிவாங்குதல் மற்றும் நீதி என்பன ஒன்றல்ல. சகிப்புத்தன்மை இன்மை தீங்கை மாத்திரம் விளைவிப்பதை வரலாறு எமக்கு சொல்கின்றது.*
- ☐ *முதலில் நாம் எமக்குள் அமைதியை ஏற்படுத்த பணி புரிய வேண்டும். பின்னர் தான் நாம் எமது சமூகங்கள் உலகளாவிய ரீதியில் அமைதியை ஏற்படுத்த முயலலாம்.*
- ☐ *சகிப்புத்தன்மை என்பது வாழ்நாள் முழுவதும் தொடரும் முயற்சியாகும்.*

## அமர்வு 14: சகிப்புத்தன்மையை ''நினைவுடன்'' தொடர்பு படுத்தல்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 45 நிமிடங்கள்

மேல் நோக்கு:கடந்தகாலத்தின் நினைவுகள், மரபுரிமைப்பேறு போன்றவற்றை எதிர்காலத்துக்கான பாடங்களை கற்றல் மற்றும் அமைதியான வாழ்வை உறுதி செய்தல் ஆகிய நோக்குகளுடன் மீட்டுதல்

செயற்பாடு:சகிப்புத்தன்மை பற்றிய உண்மைகளை எமது சொந்த நினைவுகளின் ஊடாக தொடர்புபடுத்துதல்

நோக்கம்: பங்குபற்றுனர்கள் தமது சகிப்புத்தன்மை மட்டங்களை அதிகரிக்க மூலோபாயங்களை அடையாளம் காணும் நோக்கில் அவர்களின் சொந்த நினைவுகளின் வெளிச்சத்தில் சகிப்புத்தன்மை பற்றிய கருதுகோள் தொடர்பான புரிதலை ஆழமாக்குதல்.

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ *பங்குபற்றுனர்களை சிறு குழுக்களாக பிரிக்கவும். குழுக்களின் எண்ணிக்கை நீங்கள் தயாரித்து வைத்துள்ள சகிப்புத் தன்மை பற்றிய உண்மைகளின் எண்ணிக்கைக்கு சமமானதாக இருக்க வேண்டும்.*
- ☐ *அனைத்து குழுக்களுக்கும் அச்சிடப்பட்ட சகிப்புத்தன்மை பற்றிய உண்மைகள் பட்டியலை வழங்கவும்.*
- ☐ *அனைத்து குழுக்களையும் 15 நிமிடங்கள் சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளும்படி கூறவும்.*
- ☐ *அனைத்து குழுக்களையும் தமது பிரதேசம் அல்லது கிராமத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றை நினைவுக்கு கொண்டுவந்து தொடர்பு படுத்துமாறு கூறுங்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட சகிப்புத்தன்மை பற்றிய உண்மைகளை விளக்குமாறு அல்லது அவற்றுக்கு ஆதரவளிக்குமாறு கூறுங்கள்.*

*அனைத்து குழுக்களையும் தமது நாளாந்த வாழ்வில் சகிப்புத் தன்மையை மேம்படுத்த பின்பற்றக் கூடிய உறுதியான மூலோபாயம் ஒன்றை தீர்மானிக்கும்படி கூறுங்கள்.*

### கலந்துரையாடல் விடயங்கள்

- ☐ *அது ஒரு நேர்மறையான கதையா அல்லது எதிர்மறையான கதையா?*
- ☐ *இந்த பயிற்சியின் மூலம் நீங்கள் எதைக் கற்றுக் கொண்டீர்கள்?*
- ☐ *அந்த இடத்தில் மக்கள் முதலில் சகிப்புத்தன்மையுடன் அல்லது சகிப்புத்தன்மை அற்ற விதத்தில் நடந்து கொண்டனர் என ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்?*
- ☐ *உங்களது சமூகங்களில் சகிப்புத்தன்மையின் பரந்த கலாச்சாரத்தை உருவாக்க நீங்கள் பிரேரிக்க விரும்பும் மூலோபாயம் எது?*

## அமர்வு 15: சகிப்புத்தன்மை நடை

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 60 நிமிடங்கள்

மேல்நோக்கு: அனேகமாக மக்கள் அவர்களின் வேறுபாடுகள் காரணமாக அநீதியாக நடத்தப்படுகின்றனர். இவ்வாறான சூழ்நிலை இயல்பான நிகழ்வாகும். ஒவ்வொரு தனி நபரும் தமது வாழ்வின் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இதற்கு முகம் கொடுத்தே ஆக வேண்டும். இதன் பிரகாரம், இளையோருக்கு சகிப்புத்தன்மையை உட்புறப் படுத்த காணப்படும் சிறந்த வழி தமது சொந்த அனுபவங்களை விமர்சன பிரதிபலிப்புக்கு உட்படுத்துவதாகும்.

நோக்கம்: அமர்வின் இறுதிப்பகுதியில் பங்குபற்றுனர்கள் சகிப்புத்தன்மையின் பரந்த கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவது முதலாவதும் மற்றும் மிக முக்கியமானதுமான தனிநபர் கடப்பாடு என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ பங்குபற்றுனர்களை நடப்பதற்கு சாத்தியமான இடம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- ☐ அவர்களின் பதிலுக்கு ஏற்ப அவர்கள் ஓரடி முன்னால் அல்லது பின்னால் வைக்க வேண்டும் எனக் கூறுங்கள்.
- ☐ பங்குபற்றுனர்கள் எந்த அடி எடுத்து வைப்பினும் அது ஒரே நேரத்தில் வைக்கப்பட வேண்டும் எனக் கூறுங்கள்.அனைத்து குழுக்களையும் தமது நாளாந்த வாழ்வில் சகிப்புத் தன்மையை மேம்படுத்த பின்பற்றக் கூடிய உறுதியான மூலோபாயம் ஒன்றை தீர்மானிக்கும்படி கூறுங்கள்.

அனைவரையும் ஒரு நேர்கோட்டில் நிற்குமாறு கூறுங்கள்
சகிப்புத்தன்மை பற்றிய பின்வரும் கூற்றுக்களை வாசித்துக் காட்டுங்கள்.

> கூற்று தொடர்பான பங்குபற்றுனர்களின் தனிப்பட்ட அனுபவம் நேர்மறையானது எனில் அவன்/அவள் ஓரடி முன்னால் எடுத்து வைக்க வேண்டும். அவர்களது தனிப்பட்ட அனுபவம் எதிர்மறையானது எனில் ஓரடி பின்னால் எடுத்து வைக்க வேண்டும்.

### கூற்றுகள்

- ☐ எனது உண்மையான திறமை காரணமாக எனக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.
- ☐ எனது இனம் காரணமாக எனக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.
- ☐ போட்டி ஒன்றில் எனது செயற்பாடு காரணமாக நான் பாராட்டப்பட்டேன்.
- ☐ எனது வேறுபாடு காரணமாக நான் பயறுருத்தப்பட்டேன்.
- ☐ எனது மத அனுஷ்டானங்களை எனது நண்பர்கள் மதித்தனர்.
- ☐ எனது மதம் மற்றும் இன அடையாளத்தை வெளியிட்டால் அசௌகரியமாக உணரும் சந்தர்ப்பங்கள் இருந்தன.
- ☐ எனது கலாச்சார அடையாளம் ஏற்கப்பட்டமை தொடர்பில் நான் உண்மையாக மகிழ்ச்சி அடைந்தேன்.
- ☐ எனது கலாச்சார அடையாளத்தைக் கொண்டு நான் கெட்ட வகையில் மட்டிடப் பட்டதை எண்ணி நான் மிகவும் கவலையடைந்தேன்.
- ☐ எனது பால்நிலை, இனம் மற்றும் குலம் அடிப்படையில் நான் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்பட்ட அனுபவம் உண்டு.
- ☐ எனது நண்பர்களின் மத அடையாளங்களை நான் மதிக்கிறேன்.
- ☐ நான் மக்களை அவர்களது உடலியல் வேறுபாடுகளைக் கொண்டு ஒருபோதும் மட்டிடுவதில்லை.
- ☐ எனது உடலியல் வேறுபாடுகளைக் கொண்டு நான் மட்டிடப் படுகிறேன்.
- ☐ எனது இயலாமைகள் காரணமாக நான் தவிர்க்கப்படுவது தொடர்பில் நான் கவலையடைந்துள்ளேன்.
- ☐ எனது கலாச்சார நடவடிக்கைகள் காரணமாக நான் அவமதிக்கப்பட்டமை தொடர்பில் நான் அவமானம் அடைந்துள்ளேன்.

### கலந்துரையாடலுக்கான கேள்விகள்

- ☐ இந்த செயற்பாடு தொடர்பில் ஏதாவது கடினமாக இருந்ததா? அது என்ன?
- ☐ முன்னால் அடி எடுத்து வைக்க முடியாத சந்தர்ப்பத்தில் எவ்வாறு உணர்ந்தீர்கள்?
- ☐ இந்த உணர்வுகளை விபரிக்க என்ன வார்த்தைகளை உபயோகிப்பீர்கள்?
- ☐ முன்னால் மற்றும் பின்னால் செல்வது எந்தளவுக்கு இலகுவாக இருந்தது?
- ☐ சகிப்புத்தன்மை தொடர்பில் இந்த செயற்பாடு எதை எமக்கு கற்பிக்க முடியும்?
- ☐ தனிக் குழுக்கள் நல்லதா கூடாததா? விளக்கவும்
- ☐ உங்களது சகபாடிகள் இந்த செயன்முறையில் எவ்வாறு உணர்ந்திருப்பர்?
- ☐ சகிப்புத்தன்மையின் பரந்துபட்ட கலாச்சாரத்தை உருவாக்க நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்?



மூலம்: www.hbtg.org.uk

# #உரையாடல் - உரையாடல் முரண்பாட்டை ஒரு சிறந்த தீர்வை நோக்கி உருமாற்ற சிறந்த வழியாகும்

# பிரிவு ஆறு
# உரையாடலின் அடிப்படைக் கருதுகோள்கள்


முரண்பாட்டை நேர்மறையாக உருமாற்ற தொடர்ச்சியான உரையாடல் மிகவும் வினைத்திறன் மிக்க வழியாகும். முரண்பாட்டு உருமாற்ற சூழமைவில் உரையாடல் என்பது முரண்பாட்டுடன் தொடர்பு டைய தனிநபர்கள் மற்றும் குழுக்களின் இடையே ஒரு பொது நன்மையை அடையாளம் கண்டு அடையும் நோக்கில் இடம்பெறும் ஆக்கபூர்வமான மற்றும் உள்ளடக்கிய பேசுதல், கலந்துரையாடல் மற்றும் விவாதித்தல் ஆகும். முரண்பாட்டின் பேண்தகு உருமாற்றத்தை அடைவதற்கு கரிசனை கொண்ட தரப்புகள் உரையாடல் தொடர் செயன்முறையின் உரிமைத்துவத்தை உருவாக்குவதுடன் பொதுவான சவால்களை வெற்றிகொள்ள தேவையான அணுகுமுறைகளை அடையாளம் காண்பதில் பங்குதாரர்களாக செயற்பட வேண்டும்.

**வெறுமனே பேசுவது அன்றி, கற்றலை இன்றியமையாததாக ஆக்குகின்றது:** இந்த தொடர் செயன்முறை வெறுமனே மேசையை சுற்றி அமர்வது அன்றி, மக்கள் பேசும் வழிகளை, சிந்திக்கும் வழிகளை மற்றும் பரஸ்பர தொடர்பாடலை மாற்றி அமைக்க வேண்டும். ஏனைய கலந்துரையாடல் வடிவங்களைப் போலன்றி, உரையாடலுக்கு சுய பிரதிபலிப்பு, விசாரிக்கும் உயிர்ப்பு மற்றும் வருகை தருவதற்கான தனிப்பட்ட மாற்றம் என்பன அவசியமாகின்றன. பங்குபற்றுனர்கள் வெறுமனே மேற்பரப்பு குணங்குறிகளை மாத்திரமன்றி நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களை தீர்க்க விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**உரையாடல் பரஸ்பர மனிதத் தன்மையை ஏற்றுக் கொள்கிறது.** பங்குபற்றுனர்கள் ஒருவருக்கொருவர் பரிவை வெளிக்காட்ட விருப்பம் உள்ளவர்களாக, வேறுபாடுகளை மற்றும் ஒத்த தளங்களை ஏற்கக் கூடியவர்களாக மற்றும் மாற்றத்துக்கான இயலுமையை வெளிக்காட்ட கூடியவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறான மனித தொடர்புகளை போசிக்க மரியாதை மிகுந்த நடுநிலையான சூழ்நிலை அல்லது பாதுகாப்பான தளம் விரும்பப் படுகின்றது.

**உரையாடல் நீண்டகால பார்வைகளை வலியுறுத்துகின்றது.** கலந்துரையாடலின் ஏனைய வடிவங்கள் பிரச்சனைகளின் அடிப்படைக் காரணிகளில் கவனம் செலுத்தாது அறிகுறிகளின் மீது கவனக் குவிவைக் கொண்டுள்ளன. பேண்தகு தீர்வுகளை அடைய நேரம் மற்றும் பொறுமை என்பன அவசியமானவை. இந்த தொடர் செயன்முறை வலிகளை ஏற்படுத்தும் அளவுக்கு மெதுவானதாகவும் அதிகரித்துச் செல்வதாகவும் காணப்படலாம். இது 10 நிமிடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரை காலம் எடுக்கலாம். ஒற்றை இடையீடு ஆழப் பதிந்துள்ள முரண்பாட்டுக்கான காரணங்களை தீர்க்கவோ அல்லது சிக்கலான பிரச்சனைகளை கையாளவோ அநேகமான சந்தர்ப்பங்களில் போதுமானதாக இருப்பதில்லை (மூலம்: முரண்பாடு தடுப்பு மற்றும் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதில் உரையாடல் ஏன் முக்கியமானது? UNDP, 2009).

**மத முரண்பாட்டு சூழமைவில் கரிசனை கொண்ட தரப்புகளின் தொடர்ச்சியான உரையாடல் அவசியமாகின்றது.** வேறுபட்ட கலாச்சார மற்றும் மதப் பின்னணிகளின் உரையாடல் இன்மை விரும்பத்தகாத பின் விளைவுகளை ஏற்படுத்தும்.




**மூலம்**: KAICIID International Dialogue Centre, 2015

**உரையாடலுக்கான அடிப்படை விதிகள் -** வினைத்திறன் மிக்க உரையாடலுக்கு பேராசிரியர் லியோனார்ட் சுவிண்ட்ளர் பின்வரும் அடிப்படை விதிகளை அமைத்துள்ளார்.

- ☐ அனைத்து உரையாடல்களும் கலந்து கொள்கின்ற இரு தரப்புக்கும் பொது நன்மை ஒன்றை ஏற்றுக்கொள்ளல், அடையாளம் காணல் மற்றும் அடைதலை இறுதி இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும்.
- ☐ எந்த ஒரு முரண்பாட்டு நிலையிலும் உரையாடல் இருதரப்புகளும் சம அளவில் முக்கியத்துவம் கொண்ட இருபக்க திட்டமாக இருக்க வேண்டும். இந்த தொடர் செயன்முறை அந்த இரு தரப்பையும் பற்றியதே ஆகும்.
- ☐ உரையாடல் மேசைக்கு வரும் ஒவ்வொரு பங்குபற்றுனரும் முழுமையான நேர்மை மற்றும் உண்மைத்தன்மை வாய்ந்தவர்களாக இருத்தல் அவசியமாகும்.
- ☐ மத மற்றும் கலாச்சார முரண்பாட்டு சூழமைவில் ஒருவர் தனது நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அடுத்த தரப்பின் நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுடன் ஒப்பிட வேண்டுமே தவிர அடுத்த தரப்பின் நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளை தனது நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுடன் ஒப்பிடக் கூடாது.
- ☐ இசையாதிருக்கும் நிலைகளில் பங்குபற்றுனர்கள் முன் எண்ணம் எவற்றையும் கொண்டவர்களாக உரையாடலுக்கு வரக் கூடாது.
- ☐ பரஸ்பர நம்பிக்கையுடனேயே உரையாடல் இடம்பெற முடியும். இதை ஊக்குவிக்கும் விதமாக முதலில் குறைவான சர்ச்சைக்குரிய விடயங்கள் அதிக சர்ச்சைக்குரிய விடயங்களுக்கு முன்னர் கலந்துரையாடப்பட வேண்டும்.
- ☐ பங்குபற்றுனர்கள் முரண்பாட்டில் தமது நலன்கள் மற்றும் நிலைகள் தொடர்பில் ஆரோக்கியமான அளவில் விமர்சனத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

## சூழ்நிலைக் காட்சி 1

*அனுராதபுரம் மாவட்டத்தில் இரண்டு கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமம் K என அழைக்கப்படுகின்றது. கிராமம் K இல் வாழும் பெரும்பான்மையான மக்கள் முஸ்லிம்கள். இந்த கிராமத்துக்கு அயலில் சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட M என்ற கிராமம் அமைந்துள்ளது.*

*கிராமம் K ஆனது நகரத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது. K கிராமத்தில் உள்ள அதிகமான மக்கள் நகரத்தில் கடைகளை வைத்துள்ளனர். 2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் K கிராமத்தை சேர்ந்த நிலமற்ற 20 பேர் ஜெயபூமி திட்டத்தின் கீழ் M கிராமத்தை அண்டிய பகுதிகளில் புதிய நிலத் துண்டுகளைப் பெற்றனர். ஜெயபூமி என்பது அப்போதைய அரசினால் நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கும் திட்டமாகும்.*

*புதிய நிலங்களைப் பெற்ற K கிராமத்தைச் சேர்ந்த 20 முஸ்லிம்களும் M கிராமத்தை மிக அண்டிய பிரதேசத்துக்கு குடி பெயர்ந்தனர். அந்த பிரதேசத்தில் பல வருடங்களாக முஸ்லிம்களும் சிங்கள வர்களும் அமைதியான வாழ்வைக் கடைப்பிடித்து வந்ததால் அந்த நேரத்தில் எந்த சிங்களவரும் இந்த குடி பெயர்வை எதிர்க்கவில்லை.*

*பயன்படுத்தாத நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் M கிராமத்தின் சுற்றயலில் காணப்பட்டன, அந்த நேரத்தில் அங்கு 10 சிறிய குடும்பங்கள் மாத்திரமே நிலை பெற்றிருந்தன. யுத்தம் உட்பட பல்வேறுபட்ட காரணங்களால் K கிராமத்தை 20 முஸ்லிம் குடும்பங்கள் தமது நிலத்தை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தவில்லை. இந்த 10 வருட காலத்தில் இரண்டு சமூகங்களிலும் குடும்பங்கள் விருத்தி அடைந்தன. அதிகமான குழந்தைகள் பிறந்தன, அதிகமான சோடிகள் திருமணம் புரிந்தன. வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. போக்குவரத்தும் அபிவிருத்தி அடைந்தது. மக்கள் விவசாயம் மற்றும் சிறு பண்ணைத் தொழில்களில் ஈடுபடத் தொடங்கினர்.*

*அந்த 10 வருடங்களுக்கு பின்னர் முஸ்லிம்கள் வீடுகளைக் கட்டத் தொடங்கினர், நிலங்களில் செய்கைகளை மேற்கொண்டனர் அத்துடன் 10 வருடங்களுக்கு முன் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு தமது குடும்பங்களை இடமாற்றம் செய்தனர். இது அந்த நிலங்களுக்கான சட்ட ரீதியான உறுதிகள் அவர்களிடம் இருந்ததாலும் விருத்தியடையும் தமது குடும்பங்களுக்கு அதிக வீடுகள் தேவைப் படுவதாலும் அவர்கள் இதை மேற்கொண்டனர்.*

*எனினும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு எண்ணிக்கையான சிங்கள மக்கள் அங்கு நடப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. முஸ்லிம்கள் தமது நிலங்களின் உரித்துவத்தை எடுப்பதை தடுக்கும் வகையில் அவர்கள் பதட்டத்தை ஏற்படுத்தினர். முன்னொரு காலத்தில் அமைதியான வாழவைக் கொண்டு சென்ற மக்கள் எதிரிகளாகி ஒருவருக்கொருவர் சண்டை பிடித்தனர். உள்ளூர் அதிகாரசபைகள் இந்த பிரச்சனைக்கு தீர்வு தர இயலாத அல்லது விரும்பாத நிலையில் காணப்பட்டன. ஒரு காலகட்டத்தில் வன இலாகா அதிகாரிகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட பிரதேசத்தில் மரங்களை நட்டனர். அவர்கள் முஸ்லிம்களை அங்கு இடம் பெயர விடாமல் இருக்க இதை ஒரு காரணமாக பயன்படுத்தினர்.*

*தற்பொழுது, தமது விருத்தி அடைந்த குடும்பங்களுக்கு நிலம் தேவை என முஸ்லிம்கள் கூறுகின்றனர். இது மேற்குறிப்பிட்ட படி சட்ட ரீதியானது. M கிராம மக்கள் முஸ்லிம்களுக்கு தமது சுற்றயலில் நிலங்களை மறுத்தமைக்கு எதிர்காலத்தில் தமது சொந்தப் பிள்ளைகளுக்கு தேவைப்படும் என்பதும் முஸ்லிம்கள் தமது நிலங்களை ஆக்கிரமிப்பார்கள் என நம்புவதும் ஒரு காரணமாகும். அவர்களின் தரப்பில் இருந்து நோக்கும் போது இது ஒரு நியாயமான கரிசனை ஆகும். வன இலாகா தாம் நட்ட மரங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்க விரும்புகின்றது. எனவே முஸ்லிம்களை பயன்படுத்தாத தமது காணிகளை துப்பரவு செய்ய விடாமல் தடுப்பது அவர்களைப் பொறுத்த வரை ஒரு உண்மையான கரிசனை ஆகும்.*

*இந்த சூழமைவில் சில ஒத்த மனநிலை கொண்ட இளைஞர்கள் இரண்டு கிராமங்களில் இருந்தும் இரண்டு சமூகத்தலைவர்கள் இடையே ஒரு உரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தை இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கில் ஏற்பாடு செய்தனர்.*

## சூழ்நிலைக் காட்சி 2

K என அழைக்கப்படும் திருக்கோணமலைக் கிராமம் ஒன்றில் தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் இணைந்து வாழ்கின்றனர். எனினும் தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கை சிங்களக் குடும்பங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகும். இரண்டு சமூக விவசாயிகளும் நெற்செய்கைக்காக ஒரு பொதுவான குளத்தில் இருந்து நீரைப் பயன்படுத்துகின்றனர். சிங்களவர்களின் வயல் நிலங்கள் குளத்தில் இருந்து தூரமாக அமைந்துள்ளதுடன் தமிழர்களின் வயல் நிலங்கள் குலத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளன. எனவே தமிழர்கள் இலகுவாக நீரைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தமிழர்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள் சிங்களவர்களது வயல் நிலங்களின் இரு மடங்காகும். அவர்கள் குளத்தில் இருந்து அதிக நீரைப் பயன்படுத்துகின்றனர். வறட்சியான காலங்களில் குளத்தின் நீர் மட்டம் மிகவும் குறைவடைகின்றது அத்துடன் எஞ்சியுள்ள நீரை குளத்துக்கு அண்மையில் உள்ள தமிழர்கள் பயன்படுத்துவதால் சிங்களவர்கள் போதியளவு நீரைப் பெறுவதில்லை. இது சிங்களவர்களுக்கு நிதிப் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது. எனவே உள்ளூர் நிருவாக அதிகாரிகள் அங்கு வாழும் தமிழர் சமூகத்தை நீர்ப்பாவனையின் போது சிங்களவர்களையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் நீர்ப் பற்றாக்குறைக் காலத்தில் மேலதிக ஏக்கர் வயல்நிலங்களில் செய்கை பண்ண வேண்டாம் என எச்சரிக்கின்றனர். எனினும் இந்த இரண்டு சமூகங்களின் இடையே எந்த வித உரையாடல் தொடர் செயன்முறையும் இடம்பெறுவதில்லை. அத்துடன் இரண்டு சமுதாயமும் குளத்தின் நீரை முறையாக சம அளவில் பயன்படுத்த அதிகாரிகள் முன்வைக்கும் திட்டங்கள் எவற்றையும் ஒத்துக் கொள்வதில்லை. நீர்ப் பற்றாக்குறைக் காலங்களில் இரண்டு சமூகங்களும் தமக்கிடையே சண்டையிடுவதை வழமையாகக் கொண்டுள்ளன.

# அமர்வு 16: உரையாடல் திறன்கள்

செயற்பாட்டு நேரம்: குறைந்தது 1 மணித்தியாலம்

**நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் உரையாடல் தொடர் செயன்முறை மற்றும் அதை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு தேவையான மூலோபாயங்கள் தொடர்பில் விளங்கிக் கொள்வர்.**

## இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ உரையாடல் என்பதால் கருதப்படுவது என்ன மற்றும் முரண்பாடுகளை உருமாற்றுவதில் அது ஏன் மிகவும் முக்கியமானது என்பவற்றை விளக்குங்கள்.
- ☐ உரையாடல் என்பது ஒரு தடவை மேற்கொள்ளப்படும் இடையீடு அன்றி ஒரு தொடர் செயன்முறை என்பதனை தெளிவாக விளக்குங்கள்.
- ☐ தரப்பட்டுள்ள சூழமைவுக் காட்சியின் கதையை விளக்குங்கள்.
- ☐ பங்குபற்றுனர்களை மூன்று குழுக்களாக பிரியுங்கள்.
- ☐ K ஆக ஒரு குழுவையும், M ஆக ஒரு குழுவையும் மூன்றாவது குழுவை பார்வையாளர் களாகவும் அமையுங்கள்.

ஒவ்வொரு குழுவையும் குழுவின் சார்பாக உரையாடலில் கலந்து கொள்ள உள்ள பின்வரும் வகிபா-கங்களை உருவாக்க சொல்லுங்கள்.

- ☐ 1 நடுநிலை மனிதன்
- ☐ 1 நடுவர்
- ☐ 4 பிரதிநிதிகள் (ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட)
- ☐ உரையாடல் குறைந்தது இரண்டு அமர்வுகளில் இடம்பெற வேண்டும் என தெரிவியுங்கள்
- ☐ அமர்வு ஒன்றுக்கு குறைந்தது 20 நிமிடங்கள் செலவிடப்பட வேண்டும் எனக் கூறுங்கள்.

இரு தரப்பிலும் உள்ள நடுநிலை நபரை உரையாடலை ஆரம்பிக்கும்படி கூறுங்கள்.
உரையாடல் தொடர் செயன்முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை குழுக்கள் தீர்மானிக்க விடுங்கள்.

**மூன்றாவது குழுவை உரையாடலை பின்வரும் வரன்முறைகள் அடிப்படையில் மீளாய்வுக்கு உட்படுத்தும்படி கூறுங்கள்:**

**உரையாடல் புள்ளி அட்டை**

| வரன்முறை | 1 குறைந்தது - 10 கூடியது |
|---|---|
| இரு தரப்புகளும் உரையாடலை இறுதி இலக்கு ஒன்றுடன் ஆரம்பித்தன | |
| இரு குழுக்களும் நல்லதொரு பாதுகாப்பான தளத்தை உருவாக்கின | |
| இரு தரப்பும் மற்றைய தரப்பின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் தொடர்பில் பரிவுடன் இருந்தனர். | |
| உரையாடல் இலக்கு சார்ந்த பதில்களை சித்தரித்தது | |
| குழுக்கள் பரஸ்பர மனிதத் தன்மையை ஏற்றுக் கொண்டன | |
| உரையாடல் இரு தரப்பினதும் நீண்ட கால நன்மைகளில் கவனக் குவிவைக் கொண்டிருந்தது | |
| ஒவ்வொரு குழுவும் பொது நன்மை ஒன்றை அடைவதில் திறந்த மனதுடன் செயற்பட்டன | |
| இரு குழுக்களும் உரையாடலுக்கு முன் எண்ணங்கள் எதுவுமின்றி உண்மைத் தன்மையுடன் வந்திருந்தன | |
| ஒவ்வொரு பங்குபற்றுனரும் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வெளியிட்டனர் | |
| உரையாடல் நடவடிக்கைகளுடன் நிறைவுற்றது | |
| ஒவ்வொரு குழுவும் நம்பிக்கையின்மையை தவிர்த்து எதிர்கால நம்பிக்கையை கொண்டு வர முயற்சித்தன | |
| ஒவ்வொரு குழுவுக்கும் வெளியிட போதுமான இடம் கிடைத்ததால் தெளிவான தொடர்பாடலை மேற்கொண்டன | |

## கலந்துரையாடல் விடயங்கள்:

- ☐ கலந்துரையாடிய குழுக்கள் பெற்ற சராசரிப் புள்ளிகள் எவை?
- ☐ உரையாடலின் ஒட்டு மொத்த வெற்றி பற்றி இந்த புள்ளிகள் என்ன கூறுகின்றன?
- ☐ உரையாடலின் போது எது நன்றாக இடம்பெற்றது? எது இல்லை?
- ☐ எவை நன்றாகப் போயிருக்கும்?
- ☐ இந்த பயிற்சியில் கற்றுக் கொள்ளக் கூடிய விடயங்கள் எவை?

HUMAN
RIGHTS

மூலம் : www.Logoblink.com

**#மனித உரிமைகள் -**
**"ஒவ்வொருவரும் கருத்து மற்றும்**
**வெளியிடும் உரிமையைக் கொண்டுள்ளனர்.**
**இந்த உரிமையில் தலையீடுகள் இன்றி கருத்துக்களை**
**கொண்டிருக்கவும் எல்லைகள் இன்றி எந்த**
**ஊடகத்தின் ஊடாகவும் தகவல்கள் மற்றும் யோசனைகளைத்**
**தேடவும் பெறுவதற்குமான சுதந்திரமும் உள்ளடங்குகின்றது"**

- ஐக்கிய நாடுகள், உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம்

பிரிவு ஏழு

# மனித உரிமைகளின் அடிப்படைக் கருதுகோள்கள்

மனித உரிமைக் கொள்கைகள் சுதந்திரமான, நீதியான மற்றும் அமைதியான உலகை இலக்காகக் கொண்டிருப்பதோடு எல்லா இடத்திலும் தனி நபர்கள், நிறுவணங்கள் எவ்வாறு மக்களை நடத்த வேண்டும் என்பதற்கு ஆகக் குறைந்த நியமங்களை வகுத்துள்ளன. மனித உரிமைகளாவன இனம், பால்நிலை, தேசியம், குலம், மொழி, மதம் அல்லது ஏனைய நிலைகள் தொடர்பற்றதும் அனைத்து மனிதர்களுக்கும் உள்ளார்ந்ததும் ஆகும். மனித உரிமைகளில் வாழ்வதற்கான உரிமை மற்றும் சுதந்திரம், அடிமைத்தனம் மற்றும் துன்புறுத்தப்படல் என்பவற்றில் இருந்து சுதந்திரம், கருத்து மற்றும் வெளியீட்டுக்கான சுதந்திரம், வேலை புரிதல் மற்றும் கல்விக்கான உரிமை உட்பட அதிகமான விடயங்கள் உள்ளடங்குகின்றன.

மனித உரிமைகள் தனி நபர்கள் மற்றும் குழுக்களுக்கு அவர்களின் அடிப்படைச் சுதந்திரம் மற்றும் கௌரவம் மனித உரிமைகள் சட்டத்தினால் சட்ட ரீதியாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. அவை ஒப்பந்தங்கள் மற்றும் வழமையான சர்வதேசச் சட்டங்கள், கொள்கைகளின் தொகுதி மற்றும் சட்டத்தின் ஏனைய மூலங்களால் வெளியிடப்பட்டுள்ளன. மனித உரிமைகள் சட்டம் குறிப்பிட்ட வகையில் நடந்தொழுகுவதற்கான கடப்பாட்டை வைப்பதோடு சில குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கின்றது. எனினும் இந்த சட்டம் மனித உரிமைகளை உருவாக்குவதில்லை. மனித உரிமைகள் என்பது உள்ளார்ந்த உரிமையளிக்கப்பட்டதாகும். அது அனைத்து நபர்களும் மனிதர்களாக இருப்பதன் விளைவாக வருகின்றது. ஒப்பந்தங்கள் மற்றும் சட்டத்தின் ஏனைய மூலங்கள் மனிதர்களின் உரிமைகளை அனுபவிப்பதில் இடையூறுகளை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அல்லது நடவடிக்கை இன்மை என்பவற்றில் இருந்து பாதுகாக்க பொதுவாக முறைசார் வகையில் பணி புரிகின்றன.

எனினும், மனித உரிமைகள் சட்டத்துடனோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையுடனோ ஆரம்பிப்பதில்லை. சமூகங்கள் முழுமையாக சமூக நலன்களை தேடும் விதத்தில் அவை நீதி முறைமைகள் மற்றும் தகுதிகள் என்பவற்றை உருவாக்கியுள்ளன. நீதி, நியாயம் மற்றும் மனிதத் தன்மை என்பனவற்றின் உசாத்துணைகள் அனைத்து உலக மதங்களுக்கும் பொதுவானவை. பௌத்தம், கிறிஸ்தவம், கன்பூசியனியம் மற்றும் இஸ்லாம். எனினும் முறைசார் கொள்கைகள் வழமையாக பொதுவான கடைப்பிடிப்பில் இருந்து மாறுபடுகின்றன. 18 ஆம் நூற்றாண்டு வரை எந்த ஒரு சமூகமோ, நாகரிகமோ அல்லது கலாச்சாரமோ மேற்குலக நாடுகளிலோ அல்லது மேற்குலம் அல்லாத இடத்திலோ மனித உரிமைகளின் பரந்த அதிகாரமளிக்கப்பட்ட பின்பற்றல் அல்லது மாற்ற முடியாத மனித உரிமைகள் தொடர்பான தொலை நோக்கு என்பவற்றைக் கொண்டிருக்கவில்லை.

அனைவருக்கும் பாகுபாடின்றி இந்த உரிமைகள் உரித்துடையன. அனைத்து மனிதர்களும் மனித உரிமைகளை சம அளவில், உலகளாவிய ரீதியில் மற்றும் எப்போதும் கொண்டிருக்கின்றார்கள். மனித உரிமைகள் மாற்றப்பட முடியாதவை: மனிதனாக இருப்பது முடிந்தாலன்றி நீங்கள் அந்த உரிமைகளை இழக்க முடியாது. மனித உரிமைகள் பகுக்கப்பட முடியாதவை: நீங்கள் குறைவான முக்கியத்துவம் கொண்டவராக அல்லது தேவைப்படாதவராக இருப்பினும் உங்களுக்கு உரிமை மறுக்கப்பட முடியாது.

- ☐ பின்வருவன சில மிக முக்கியமான மனித உரிமை இயல்புகளாகும்.
- ☐ மனித உரிமைகள் கௌரவத்துக்கான மரியாதை மற்றும் ஒவ்வொரு நபரினதும் பெறுமதி என்பவற்றினால் உருவாக்கப்பட்டுள்ளன.
- ☐ மனித உரிமைகள் உலகளாவியது, இதன் கருத்து அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றி சம அளவில் பிரயோகிக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் பகுக்கப்பட முடியாதவை, அதாவது எவரும் அவனின் அல்லது அவளின் மனித உரிமைகளை பறிக்க முடியாது, பிரத்தியேக சூழ்நிலைகளைத் தவிர. உதாரணமாக நீதி மன்றம் ஒன்றினால் ஒருவர் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அவரின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படும்.

மனித உரிமைகள் பகுக்கப்பட முடியாதவை, இடையுறவுள்ளவை, இடைச்சார்புள்ளவை, இந்த காரணங்களுக்காக சில உரிமைகளை மதிப்பதும் ஏனையவற்றை மதிக்காமல் இருப்பதும் போதுமானது அல்ல. நடைமுறையில் ஒரு உரிமையின் மீறல் ஏனைய பல உரிமைகளின் மரியாதையை பாதிக்கும். எனவே அனைத்து மனித உரிமைகளும் சம முக்கியத்துவம் உள்ளனவாக நோக்கப்பட வேண்டியதோடு அனைத்து நபர்களின் பெறுமதி மற்றும் கௌரவத்துக்கான மரியாதை என்பவற்றுக்கு சம அளவில் தேவைப்படுவனவாகும்.

இந்த மனித உரிமைகளைக் கோரும் போது அனைவரும் ஏனையவர்களின் உரிமைகளை மதிப்பதற்கான மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் ஆதரவளித்தல் என்பவற்றுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த பொறுப்பை நிறைவேற்றுதல் என்பது ஏனைய அனைத்து மனிதர்களுடனும் ஒருமைப்பாட்டைக் கோரல் எனப் பொருள்படும்.

### தொடர் செயன்முறை

*ஆரம்பக் கூற்று:* எமது முன்னைய அமர்வுகளில் நாம் சகிப்புத்தன்மையின் விழுமியங்கள், வேறுபாடுகளை மதித்தல் மற்றும் ஒவ்வொரு மனிதனும் அவன்/அவள் ஆக இருப்பதை சம கௌரவத்துடன் மதித்து பரந்த அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் உரையாடலை வினைத்திறன் மிக்க வழியாகப் பயன்படுத்தல் போன்ற விடயங்கள் கையாளப்பட்டன. எந்த ஒரு முரண்பாட்டுக்கு பின்னரான சூழ்நிலையிலும் அவை மீண்டும் தோன்றுதலை தடுக்கும் முக்கிய வழியாக மனித உரிமைகளை மதிக்கும் உயிர்ப்பான கலாச்சாரத்தினை உருவாக்குதல் காணப்படுகின்றது. இந்த அமர்வில் நாம் மனித உரிமைகள் எவை, உள்ளூர் மற்றும் உலகளாவிய மட்டங்களில் பேண்தகு சமாதானத்தை உருவாக்குவதில் ஏன் அவை முக்கியமானவை போன்ற விடயங்களை விளங்கிக் கொள்ள முயற்சிப்போம். எதிர்மறை மற்றும் நேர்மறை அமைதியை ஏற்படுத்துவதற்கு மனித உரிமைகள் அவசியமானவை என்பதை நீங்கள் விரைவில் கண்டு கொள்வீர்கள்.

## அமர்வு 17: மனித உரிமைகள் பற்றிய அறிமுகம்

**நோக்கம்: அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் மனித உரிமைகளின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.**

**பொருட்கள்: பேனைகள், பிலிப் அட்டவணைக் காகிதங்கள், புளூ டாக், மெழுகு வண்ணக்கோல்கள் மற்றும் வரைதல் காகிதங்கள்**

**செய்முறை:**

- ☐ இந்த அமர்வு மரம் ஒன்றை வரைவதன் மூலம் மனித உரிமைகளின் அடிப்படைக் கருதுகோள்களை விளங்கிக் கொள்வதை நோக்காகக் கொண்டது என்பதை பங்குபற்றுனர்களுக்கு விளக்குங்கள்.
- ☐ பங்குபற்றுனர்களை கலந்த குழுக்களாகப் பிரியுங்கள் (நான்கு குழுக்கள் விரும்பத்தக்கது).
- ☐ பிலிப் அட்டவணை அல்லது பெரிய காகிதத்தில் மரமொன்றை வரையும்படி கூறுங்கள்.
- ☐ மரத்தின் கிளைகள், இலைகள் மற்றும் பழங்களில் அனைத்து மக்களும் கொண்டிருக்க வேண்டிய உரிமைகள் என அவர்கள் கருதுவனவற்றை எழுதும்படி கூறுங்கள். குழுவினுள் கலந்துரையாடலை ஊக்குவிக்கவும்.
- ☐ வேர்களில் மனித உரிமைகளை செழிப்படையச் செய்யும் விடயங்களை எழுதும்படி கூறுங்கள்.

சாத்தியமான விடைகள்: நல்லாட்சி, சட்டங்களை நீதியாக அமுல்படுத்தல், சுரண்டல் அற்ற பொருளாதார நிலைகள், மக்கள் பங்களிப்பு, எதிர்கால அபிவிருத்தியின் சம விநியோகம் உட்பட ஏனைய விடயங்கள்.

- ☐ வரைதல் முடிவடைந்த பிறகு குழுக்களை தமது மரங்களை சமர்ப்பித்து உள்ளடக்கப்பட்ட விடயங்களை விளக்குமாறு கூறுங்கள்.
- ☐ அடிப்படை உரிமைகள் பற்றிய கலந்துரையாடல் அனைத்து மனிதர்களுக்கும் அவசியமானது என சுருக்கமாக விளக்குங்கள். அத்துடன் மனித உரிமைகளை செழிப்பாக்கும் காரணிகளை அறிமுகம் செய்யுங்கள்.

## அமர்வு 18: சிறுவர்கள், இளைஞர்கள், சமாதானம் மற்றும் மனித உரிமைகளுக்கான சர்வதேச உபகரணங்கள் பற்றிய அறிமுகம்

**நோக்கங்கள்:** அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் மனித உரிமைகள் மற்றும் அமைதி தொடர்பான முக்கிய உபகரணங்கள் பற்றி அறிந்து கொள்வர்.

**பொருட்கள்:** பின்வரும் ஆவணங்களை பங்குபற்றுனர்களுக்கு வழங்குங்கள்.

உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் சுருக்கம்

பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW)

சிறுவர் உரிமை பற்றிய உடன்படிக்கையின் சுருக்கம்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் இளைஞர், அமைதி மற்றும் பாதுகாப்பு தீர்மானம் 2250 இன் சுருக்கம்

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

*பங்குபற்றுனர்களிடம் பின்வரும் தூண்டக் கூடிய கேள்விகளைக் கேளுங்கள்.*

- ☐ *உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மனித உரிமைகள் பிரயோகமானது என் ஏன் நீங்கள் கருதுகின்றீர்கள்?*
- ☐ *பல்வேறுபட்ட நாடுகளில் வாழும் மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டதை நீங்கள் அவதானித்துள்ளீர்களா?*
- ☐ *உங்களது நாடு அல்லது வேறு நாடுகளில் உள்ள மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள் அல்லது துலங்கலை வெளிப்படுத்தினீர்கள்?*
- ☐ *உள்ளூர் அல்லது சர்வதேச மட்டத்தில் மக்களின் மனித உரிமைகள் நிலை நிறுத்தப்பட என்ன நடக்க வேண்டும் என நீங்கள் காண விரும்புகிறீர்கள்?*
- ☐ *கீழே தரப்பட்டுள்ள கருவிகளை அனைத்து குழுக்களுக்கும் விநியோகிக்கவும் (உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் சுருக்கம், பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW), சிறுவர் உரிமை பற்றிய உடன்படிக்கையின் சுருக்கம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ,இளைஞர், அமைதி மற்றும் பாதுகாப்பு தீர்மானம் 2250 இன் சுருக்கம்)*
- ☐ *அனைத்து குழுக்களையும் அவர்கள் மரத்தில் எழுதிய உரிமைகள் மற்றும் சுருக்க ஆவணங் களில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் என்பவற்றுடன் பொருத்திப் பார்க்குமாறு கூறுங்கள்.*

*அமர்வை பூர்த்தி செய்யும் முகமாக ஒவ்வொரு உபகரணமும் எவ்வாறு உருவாக்கப்பட்டது, உள்ளூர் மற்றும் சர்வதேச அமைதி உருவாக்கத்தில் அவற்றின் தொடர்பு என்ன என்பதை விளக்கவும்.*

## அமர்வு 19: சமாதானம் மற்றும் மனித உரிமைகள்

**ஆரம்பக் கூற்று:** பங்குபற்றுனர்களிடம் அவர்களது உள்ளூர் சூழமைவு மற்றும் அவர்கள் எந்த அளவுக்கு மனித உரிமைகள் பற்றி இது வரை அறிந்துள்ளனர் எனக் கேளுங்கள். இந்த உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா? சவால்கள் எவை? இதன் விளைவாக ஒட்டுமொத்த சமாதானம் எவ்வாறு பாதிக் கப் படுகின்றது?

**நோக்கங்கள்:** அமர்வின் இறுதியில் பங்குபற்றுனர்கள் மனித உரிமைகள் தொடர்பான சூழமைவு நிலை மற்றும் அது எவ்வாறு அமைதியை பாதிக்கின்றது என்பதை நன்கு விளங்கிக் கொள்வர்.

### இலகுபடுத்துனருக்கான வழிகாட்டிகள்

- ☐ ஏற்கனவே உருவாக்கப்பட்ட குழுக்களை தொடர்ந்து இயங்குமாறு கூறுங்கள்.
- ☐ ஒரு உபகரணத்தை தெரிவு செய்யுமாறு கூறுங்கள். அவர்கள் முந்திய செயற்பாட்டில் பயன்படுத்திய உபகரணத்தை வைத்திருக்கலாம்.
- ☐ ஒவ்வொரு குழுவையும் தாம் கொண்டுள்ள உபகரணத்தில் உள்ள மனித உரிமைகள் அவர்களது பிரதேசங்களில் எவ்வாறு மீறப்படுகின்றன என்பதைக் கலந்துரையாடும்படி கூறுங்கள்.
- ☐ அவர்களை சூழ்நிலையை உருவகப் படுத்தும் சிறு படக் கதையை ஆகக் கூடியது 6 படங்களைப் பயன்படுத்தி வரையுமாறு கூறுங்கள்.
- ☐ ஒவ்வொரு குழுவையும் தமது படக்கதையை காட்சிப் படுத்தும்படி கூறுங்கள்.
- ☐ அனைத்து குழுக்களையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள படக்கதைகளை சூழ ஒரு விரைவான சுற்றுலாவை மேற்கொள்ளும்படி கூறுங்கள். அந்த படக்கதைகளில் அவர்கள் காண்பதை கலந்துரையாடும்படி கூறுங்கள்
- ☐ இறுதியாக குழுக்களை தமது கதைகளை சமர்ப்பிக்கும்படி கூறுங்கள்.

உலகளாவிய பிரகடனங்களில்

# மனித உரிமைகள்

1948 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொல்லப்பட்டது. அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுர்தந்திரம் பற்றிய உலகளாவிய பிரகடணம்

பிறரின் உரிமைகளை மதிப்பதற்கான பொறுப்பு உங்களுக்கு உள்ளது

நாம் அனைவரும் சமமானவர்களாக மற்றும் சுதந்திரமானவர்களாக பிறந்தவர்கள் அனைவரும் இந்த உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் உங்களது ,னம், மதம் அல்லது தேசியம் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது அனைவருக்கும் வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான உரிமை உண்டு.

எவரும் உங்கள் உரிமையை பறிக்க முடியாது

உங்களை அடிமைப்படுத்த எவருக்கும் உரிமை இல்லை

எவருக்கும் உங்களைத் துன்புறுத்த உரிமை இல்லை

சட்டத்துக்கு முன்னால் எங்கும் நீங்கள் ஒரு நபராக கருத்தில் கொள்ளப்பட்டுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு

சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள. சட்டத்தினால் பாதுகாப்புப் பெறும் உரித்துடையவர்கள்.

உங்களின் உரிமைகள் மீறப்படும் பொது சட்ட உதவியை நாடும் உரிமை உங்களுக்கு உண்டு.

எவருக்கும் உங்களை பிழையாக சிறையில் அடைக்க அல்லது நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்க உரிமை இல்லை.

உங்களுக்கு நீதியான மற்றும் வெளிப்படையான நீதி மன்ற விசாரணை க்கான உரிமை உண்டு.

குற்றம் நிரூபிக்கப்படும் வரை அனைவரும் அப்பாவிகளே

உங்களின் அந்தரங்கத்துக்கு உரிமை உண்டு. எவரும் உங்களது புகழ், குடும்பம், வீடு அல்லது தொடர்பாடல்களில் தலையிட முடியாது

நீங்கள் விரும்பிய இடத்துக்கு பயணம் செய்யலாம்

உங்களது சொந்த நாட்டில் நீங்கள் துன்புறுத்தப்பட்டால் வேறொரு நாட்டில் தஞ்சம் கோர உங்களுக்கு உரிமை உண்டு

ஒவ்வொரு நபருக்கும் தேசியம் ஒன்றுக்கான உரிமை உண்டு.

வளர்ந்தோர் சகலருக்கும் திருமணம் முடிக்கவும் குடும்பத்தை கட்டியெழுப்பவும் உரிமையுண்டு

உங்களுக்கு சொத்துரிமை உண்டு

அனைவருக்கும் மதம் ஒன்றைப் பின்பற்றும் உரிமை உண்டு.

கருத்துச் சுதந்திரம்: உங்களுக்கு சுதந்திரமான கருத்துக்களைக் கொண்டிருத்தல் மற்றும் உங்களது அபிப்பிராயங்களை பிறருக்கு கூறும் உரிமை உண்டு

அமைதியாக ஒன்றுகூட அனைவருக்கும் உரிமை உண்டு

உங்களுக்கு உங்களது நாட்டின் அரசில் நேரடியாக அல்லது பிரதிநிதிகள் மூலம் பங்கெடுக்க மற்றும் தெரிவு செய்ய உதவ உரிமை உண்டு.

உங்களுக்கு சமூக பாதுகாப்பு உரிமை உள்ளதோடு நீங்கள் அரசின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உதவிகளுக்கு உரித்துடையவர்.

தொழிலாளர் உரிமை: ஒவ்வொரு வளர்ந்தவருக்கும் வேலை, நியாயமான சம்பளம் மற்றும் தொழில் சங்கம் ஒன்றில் இணைவதற்கான உரிமை உண்டு.

உங்களுக்கு பொழுதுபோக்கு மற்றும் பணியில் இருந்து ஓய்வுக்கான உரிமை உண்டு

ஒவ்வொருவருக்கும் தமக்கும் தமது குடும்பத்துக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்தை கொண்டிருக்கும் உரிமை உண்டு.

கல்வி கற்பதற்கான உரிமை சகலருக்கும் உண்டு

ஒரு கலைஞராக அல்லது அறிவியலாளராக உங்களது புலமைச் சொத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

நாம் அனைவரும் சமூக ஒழுங்குக்கு உரித்துடையவர்களாக இருப்பதால் எமக்கு இந்த உரிமைகளை அனுபவிக்க முடியும்.

# CEDAW சுருக்கமாக

**பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை அல்லது CEDAW பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் அகற்ற மற்றும் பெண்களின் சம உரிமைகளை மேம்படுத்துவதற்கு காணப்படும் சர்வதேச சட்ட உபகரணம் ஒன்றாகும். CEDAW அநேகமான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கான சரவதேச உரிமைகளின் சட்டமூலம் எனவும் அழைக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை CEDAW ஐ 18.12.1979 அன்று ஏற்றுக் கொண்டது. 2016ம் ஆண்டு வரை 189 நாடுகள் CEDAW ஏற்றுக்கொண்டுள்ளன.**

உறுப்புரை 1 பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாட்டின் வரைவிலக்கணம்: பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாடு என்பதன் கருத்து அவர்களது மனித உரிமைகளை அனுபவிப்பதில் இருந்து தடுக்கும் வகையில் அவர்கள் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு வேறுபாடாக நடத்தப்படுவதாகும். இதில் நேரடியான மற்றும் மறைமுகமான பாகுபாடுகள் உள்ளடங்குகின்றன.

உறுப்புரை 2 பாகுபாட்டை நீக்குவதற்கான கடப்பாடு: நாடுகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாடுகளில் இருந்து அவர்களைக் காக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுப்பதன் மூலம் மற்றும் அரசியலமைப்பு மற்றும் ஏனைய தேசிய சட்டங்களில் சமத்துவக் கொள்கையை உள்வாங்கி பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்து வடிவ பாகுபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வர கடப்பாடு கொண்டன.

உறுப்புரை 3 பொருத்தமான ஏற்பாடுகள்: நாடுகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தமது மனித உரிமைகளை மற்றும் அடிப்படைச்சுதந்திரங்களை சமூகத்தின் ஒவ்வொரு விடயத்திலும் அனுபவிப்பதை உறுதி செய்வதற்கு பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

உறுப்புரை 4 தற்காலிக விஷேட ஏற்பாடுகள்: நாடுகள் பால்நிலைச் சமநிலை மற்றும் பெண்கள் அல்லது பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாடுகளை முடிவுக்கு கொண்டு வருதலை துரிதப்படுத்த தற்காலிக விஷேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

உறுப்புரை 5 பால்நிலைப் படிக வடிவங்கள்: நாடுகள் தீங்கு விளைவிக்கக் கூடிய, பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை பரப்பக் கூடிய மற்றும் பெண்கள் பெண் பிள்ளைகள் தமது உச்ச பட்ச இயலுமையை அடைவதை தடுக்கக் கூடிய பெண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் ஆண்கள், ஆண் பிள்ளைகள் பற்றிய பால்நிலைப் படிக வடிவங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உறுப்புரை 6 ஆட்கடத்தல் மற்றும் விபச்சாரச் சுரண்டல்: நாடுகள் விபச்சாரச் சுரண்டல், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை ஆட்கடத்தல் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

உறுப்புரை 7 அரசியல் மற்றும் பொது வாழ்க்கை: நாடுகள் அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாகுபாடுகளை அகற்ற வேண்டும்.

உறுப்புரை 8 சர்வதேச மட்டத்தில் பங்களிப்பு: பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் சர்வதேச மட்டத்தில் தமது நாட்டை பிரதிநிதித்துவப் படுத்தவும் சர்வதேச நிறுவனங்களின் பணிகளில் பங்கேற்பதை உறுதி செய்யவும் நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உறுப்புரை 9 தேசியம்: நாடுகள் பெண்கள் ஆண்களுக்கு ஒப்பாக தேசியம் ஒன்றைப் பெறுதல், வைத்திருத்தல் மற்றும் தேசியத்தை மாற்றுதல் அத்துடன் அவர்களது பிள்ளைகளின் தேசியம் என்பவற்றுக்கு உறுதி வழங்க வேண்டும். அத்துடன் நாடுகள் பெண்கள் ஆண்களுக்கு ஒப்பாக தமது வாழ்க்கைத் துணையின் தேசியத்தை மாற்றுவதை அனுமதிக்க வேண்டும்.

உறுப்புரை 10 கல்வி: நாடுகள் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிப்பதுடன் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் சம கல்வி உரிமையைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

உறுப்புரை 11 வேலைவாய்ப்பு: நாடுகள் வேலைவாய்ப்பில் பெண்களுக்க்கு எதிரான பாகுபாட்டை நீக்குவதோடு ஒருவரது வேலையை தெரிவு செய்வதற்கான சம வாய்ப்புகள் சம பெறுமதி உள்ள வேலைகளுக்கு சம வேதனம் பெறுதல் என்பவற்றை உறுதி செய்ய வேண்டும்.

உறுப்புரை 12 சுகாதாரப் பராமரிப்பு மற்றும் குடும்பத் திட்டமிடல்: நாடுகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு சுகாதாரப் பராமரிப்புக்கு சம அனுகுதல் உறுதி செய்யப்படுவதோடு, அனுகுதலில் பாகுபாட்டுக்கு உட்படாதிருத்தல் மற்றும் குடும்பத் திட்டமிடல் மற்றும் இனப் பெருக்க சுகாதார சேவைகளுக்கு அனுகல் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

உறுப்புரை 13 பொருளாதார மற்றும் சமூக வாழ்வு: நாடுகள் பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாட்டை நீக்க வேண்டும்.

உறுப்புரை 14 கிராமியப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள்: கிராமியப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் அவர்கள் தமது குடும்பங்களின் தப்பிப் பிழைத்தலுக்கு எடுக்கும் முக்கிய வகிபாகம் தொடர்பில் நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

உறுப்புரை 15 சட்டத்தின் முன் சமத்துவம்: சட்டத்தின் முன் பெண்கள், பெண் பிள்ளைகள் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் போன்று சட்ட உதவிக்கான மற்றும் வளங்களுக்கான அனுகுதல் உட்பட சமத்துவம் வழங்கப்படுவதை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்புரை 16 திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு: நாடுகள் திருமணம் மற்றும் குடும்ப உறவுகளில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை நீக்க வேண்டும். யாரை மணப்பது, மணப்பதா இல்லையா அத்துடன் பிறப்புடன் தொடர்புடைய ஏதாவது விடயங்கள், தத்தெடுத்தல் மற்றும் குழந்தை வளர்ப்பு போன்ற விடயங்களில் தெரிவுகள் மேற்கொள்ள ஆண்களைப் போல் பெண்களுக்கும் சம உரிமைகள் காணப்படுவதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். சிறுவர் திருமணம் சட்ட ரீதியாக செல்லுபடியற்றது அத்துடன் நாடுகள் திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதை குறிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

உறுப்புரைகள் 17 தொடக்கம் 22 வரை: இந்த உறுப்புரைகள் CEDAW ஐ ஏற்றுக் கொண்ட நாடுகளில் அவற்றின் அமுலாக்கத்தை கண்காணித்தலில் எடுக்கும் வகிபாகம் உட்பட எவ்வாறு CEDAW குழு பணியாற்றுவது போன்ற விடயங்களை விபரிக்கின்றன.

உறுப்புரைகள் 23 தொடக்கம் 30 வரை: இந்த உறுப்புரைகள் CEDAW இன் நிருவாகத்துடன் தொடர்புடையன.

விருப்பு நெறிமுறை: விருப்பு நெறிமுறை ஊநுனுயுறு இன் அமுலாக்கத்துக்கு CEDAW குழுவிடம் இருந்து தகவல் கோரல் செய்முறை உட்பட மேலதிக பொறிமுறை ஒன்றை வழங்குகின்றது. இதன் நோக்கம் முறைசார் மீறல்களைத் தீர்ப்பது மற்றும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் CEDAW இனால் பாதுகாக்கப்பட்ட தமது மனித உரிமைகள் மீறப்படுகின்றன எனக் கருதும் வேளை முறைப்பாடுகளை நேரடியாக CEDAW க்கு சமர்ப்பிப்பதும் ஆகும்.

இளைஞர்கள் மிகவும் பாரதூரமான ஒன்றுசேர்க்கப்பட்ட அபிவிருத்தி சவால்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். முற்றும் அவர்களது தேவை, மற்றும் அவர்களது இலக்குகள் ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்பட வேண்டும். இவர்கள் அனேகமாக பன்முகமான, உள் இணைக்கப்பட்ட பாரபட்சத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இது அவர்களது பொது வாழ்க்கை மற்றும் பங்குபற்றலில் குறிப்பிட்ட தடையாக காணப்படுகின்றது. இது அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி, சமாதானம் ஆகியவற்றில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஏதிர்வரும் காலங்களில் இவ்வாறான இளைஞர்களை எவ்வாறு ஈடுபடுத்துவது என்பதிலே நிலைபேண்தகு அபிவிருத்தி மற்றும் சமாதானம் தங்கியுள்ளது.

**Youth-GPS (2016-2020) – UNDP**

Ministry of National Co-existence Dialogue and Official Languages

U. S. Embassy in Sri Lanka

High Commission of Canada to Sri Lanka

The Neelan Tiruchelvam Trust

Sri Lanka Development Journalist Forum

9 789557 765129